Registered as a Newspaper
பக்கங்கள் – 24+8
விலை – ரூ. 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 349
ஞாயிற்றுக்கிழமை
10 நவம்பர் 2024
ஐப்பசி 24
வள்ளுவர் ஆண்டு 2055

நாடாளுமன்றத் தேர்தல் -2024
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
அறிவு
ஆற்றல்
ஆளுமை
X 3
சட்டத்தரணி
கேசவன் சயந்தன்

X 1
அங்கஜன் இராமநாதன்

உதயனின் வாராந்த சஞ்சீவி இணைப்பை வழக்கம் போல இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்

ட்ரம்பை கொல்ல முயன்றவரை வைத்து

# இலங்கையில் ஈரான் பெரும் சதிச்செயல்?

குற்றச்சாட்டுகளை அடுக்கியது அமெ.

**கொழும்பு, நவம்பர் 10**

அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ட்ரம்பைக் கொல்வதற்குத் திட்டமிட்டார் என்ற குற்றச்சாட்டில் கைதாகியுள்ளவரிடமே இலங்கையில் யூதர்களைக் கொல்லும் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டிருந்ததாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

22

# ஜனாதிபதி அநுர வடக்கில் பரப்புரை

கொழும்பு, நவ. 10

தேர்தல் பரப்புரை நடவடிக்கைக்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று வடமாகாணத்துக்கு வரவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தலுக்கான பரப்புரை நடவடிக்கைகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. அனைத்து மாவட்டங்

22

முச்சந்தி முரளி



"இருக்கிற பிரச்சினைக்க இந்த ஈரான் ஈ வேற சொறியப்பாக்குது"

பாராளுமன்றத் தேர்தல் 2024
உங்களில் ஒருத்தி உங்களுக்காக !
X 4
4
உமாச்சந்திரா பிரகாஷ்
Umachandraa Pragash
ஐக்கிய மக்கள் சக்தி
Samagi Jana Balawegaya

## மண்வெட்டியால் தாக்கி பெண்ணொருவர் கொலை!

வவுனியா, நவ. 10

வவுனியா - ஈச்சங்குளம் பகுதியில் மண்வெட்டியால் தாக்கப்பட்டு பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். வெற்றிமலர் (வயது -57) என்ற பெண்ணே

22

## நவம்பர் 21ஆம் திகதி புதிய அமைச்சரவை?

கொழும்பு, நவ. 10

பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெறும் பட்சத்தில் புதிய அமைச்சரவை நவம்பர் 21ஆம் திகதி கடமையேற்கும் என்று தெரியவருகின்றது.

நவம்பர் மாதம் 14ஆம் திகதி இடம்பெறவுள்ள

22

## பொதுத்தேர்தலில் 50 கண்காணிப்பாளர்கள்!

கொழும்பு, நவ. 10

நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக 50 வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் இலங்கையில் முகாமிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் மாதம் 14ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறவுள்ள

22

## ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரக்குற்றிகள் மீட்பு!

சட்டவிரோத களஞ்சியத்தை நடத்திவந்தவர் கைதானார்

மன்னார், நவ.10

மன்னார் - சிலாவத்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், சட்டவிரோத மரக் களஞ்சியசாலை முற்றுகையிடப்பட்டு ஆயிரத்து 820 மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன.

22

யாழ்.கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
தமிழ் மக்கள் கூட்டணி
யாழ் மாநகர முதல்வராக, சட்டத்தரணியாக, சமூக சேவகனாக, இந்த மணிவண்ணன் இந்த மண்ணின் மக்களுக்கு செய்த சேவைகள் கணக்கிலடங்காதவை. மக்களால் உதித்து, மக்களால் வளர்ந்த இந்த மக்களின் மண்ணுக்கு, காலகாலமாக சேவை செய்வதற்கு மணிவண்ணணாகிய நான் கடமைப்பட்டிருக்கிறேன்.
பழமை வாதிகளையும்,
போலித் தமிழ்தேசியவாதிகளையும்,
விளம்பரதாரர்களையும்
நம்பி ஏமாந்தது போதும்
மான் இற்கு வாக்களிப்போம்
மணிவண்ணன்
X 9
2025 நமதே!



அடையாளம் மாறாத அரசியல் மாற்றம்
சுமந்திரன்
X 1



பாராளுமன்றத்தேர்தல் - 2024
மக்களோடு நாம் மக்களுக்காக நாம்
தமிழ் தேசியத்தின் சின்னம் - சங்கு
ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி (தமிழ் தேசிய கூட்டமைப்பு)
5 தருமலிங்கம் சித்தார்த்தன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
6 பாலச்சந்திரன் கஜதீபன்
(ஆசிரியர், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்)



மக்கள் மனங்களை வென்ற தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உங்களுக்காக உங்களுடன் நானும் ஒருவனாய்...

## சிறந்ததோர் எதிர்காலத்தை நோக்கி...



ஒரு நல்ல மாற்றத்தைக் கொண்டு வர இதுவே ஒரு நல்ல சந்தர்ப்பம்


- **அரசியல் அபிலாஷை**
  எமது உரிமைகளையும் அடையாளத்தையும் பாதுகாக்கும் சிறந்த நல்லிணக்கச் செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் பாதிக்கப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் தேவைகளை சரிசெய்ய முயல்வேன்
- **பொருளாதார அபிலாஷை**
  கல்வி, வேலை மற்றும் விலைவாசி போன்ற அடிப்படை தேவைகளின் பொருளாதாரப் பிரச்சனைகளை சரிசெய்யும் நடவடிக்கைகளை செயற்படுத்துவேன்
- **ஒருங்கிணைந்த அரசியலுக்கான அபிலாஷை**
  வட- கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் யாவரையும் ஒன்றிணைத்துச் செல்லக்கூடிய ஓர் புதிய அரசியல் கலாச்சாரத்தை முன்னெடுப்பேன்

அரசியல், சமூக மற்றும் பொருளாதார விடியலை நோக்கி ...

சந்திரகாசன்
**இளங்கோவன்**
இலங்கைத் தமிழரசுக் கட்சி

## பாராளுமன்றத் தேர்தல் 2024

யாழ்/கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்



தேசத்தின் மீட்புக்காய்
தேசியத்
தலைவர் வழி நின்ற
போராளிகளுக்கான
அரசியல்
அங்கீகாரம்!

போராளி
சிவநாதன் நவீந்திரா
(வேந்தன்)

9

தாயகம் தேசியம் சுயநிர்ணயம்
ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி

## பாராளுமன்றத் தேர்தல்–2024

யாழ் - கிளி தேர்தல் மாவட்டம்



நாளை நமதாகும்
இந்த தேசமும் நமதாகும்...
உங்கள் வாக்கு
கறைபடியா நிறைவான தலைமைக்கு...

தோழர்
## சுரேஷ் பிரேமச்சந்திரன்
அவர்களுக்கே உங்கள் வாக்கு

ஐக்கியம் தேசியம் ஜனநாயகம்

**ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி (DTNA)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்ப்பாணம்,
கிளிநொச்சி மாவட்டம்




- முல்லைத்தீவு குருந்தூர் மலை முதல் வவுனியா வெடுக்குநாரி மலை ஈறாக வடக்குக் கிழக்கெங்கும் தமிழரின் அடையாளங்கள் அழிக்கப்பட்டபோது சட்டப்போர் தொடுத்தவன்.
- நூற்றுக்கும் அதிகமான பொதுநல வழக்குகளில் கட்டணமின்றிக் களமிறங்கியவன்.
- முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப் பிள்ளையார் கோயில் வளாகத்தினுள் பௌத்த பிக்குவின் உடலை எரிக்க முற்பட்டபோது சட்டப் போராட்டத்தைத் தொடுத்தவன்.
- பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட அப்பாவிகளுக்காகத் துணிந்து களத்தில் இறங்கியவன்.
- மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்கள். மாவீரர் நாள் நினைவேந்தல்களைத் தடுப்பதற்கு வடக்குக் கிழக்கெங்கும் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட எண்ணிறைந்த வழக்குகளை முறியடித்தவன்.
- மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது இறந்த உறவுகளை நினைவுகூர்ந்த பத்து அப்பாவிகளைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்தபோது சட்டத்தின் வழியில் போராடி விடுவித்தவன்.
- திருகோணமலையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சியமைக்காகக் கைதுசெய்யப்பட்ட தமிழர்களை வழக்காடி விடுவித்தவன்.
- யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் பொலிஸ் காவலில் மரணமடைந்த இளைஞர்களுக்காக நீதி கேட்டவன்.
- மானிப்பாயில் தனியார் காணிகளை ஆக்கிரமித்திருந்த அரச ஆதரவு ஆயுதக்குழுவை வழக்காடி வெளியேற்றியவன்.





## சட்டப் போரைத் தொடர....

கனகரட்ணம்
**சுகாஷ்**
(சட்டத்தரணி)


X 1

இலக்கு ஒன்றே இனத்தின் விடுதலை!


# பாராளுமன்றத் தேர்தல் 2024



2
**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**

9
செல்வராசா
**கஜேந்திரன்**

தமிழர் தேசமாய்
சிந்திப்போம்
செயற்படுவோம்.


X

- நேர்மையான அப்பழுக்கற்ற தலைமை
- பார்பெர்மிட் கேட்காத, பெறாத ஒரே கட்சி
- அமைச்சுப் பதவிகளை நாடாத வளைந்து கொடுக்காத நேர்மை
- தேர்தல் காலத்தில் ஒரு பேச்சும் கொழும்பிலும் வெளி நாட்டிலும் வேறு பேச்சும் என்று மக்களை ஏமாற்றாத தலைமை
- ஜேவிபி அரசாங்கத்தை பொறுப்புக் கூற வைக்கக் கூடிய ஒரேயொரு தமிழ் தரப்பு தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாத்திரமே.

நேர்மையான தமிழ் தேசியத்திற்கான சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## விழிப்புணர்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ,10 நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பொது மக்கள் எவ்வாறு வாக்களிக்க வேண்டும் என்பது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு, மட்டுவில் வடக்கு கண்ணகி சனசமூக நிலையத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதன்போது தென்மராட்சி பிரதேச செயலகங்களிலிருந்து வருகை தந்திருந்த அதிகாரிகளினால் தேர்தலில் வாக்களிக்கும் முறை தொடர்பில் விழிப்பூட்டப்பட்டது. (ச-25, 131)













## வைரவிழாவும், பரிசளிப்பும்

யாழ்.கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் வைரவிழாவும், பரிசில் வழங்கல் நிகழ்வும் வித்தியாலய முதல்வர் கு.திலீபன் தலைமையில் வித்தியாலய பிரதான மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம், குமரன் விளையாட்டுக்கழகம் கனடாக் கிளை ஆகியவற்றின் அனுசரணையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா கலந்துகொள்ளவுள்ளார். வைரவிழா நூல் நயப்புரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர் ச.லலீசன் ஆற்றுவார். (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்

**அன்புக்குரிய மக்களே!**

'இரு தேசங்கள் ஒரு நாடு' என்ற இலக்கினையடைய, தமிழ்த் தேசக் கொள்கை வழி நின்று நேர்மையாக செயற்பட்டு வருகின்றோம். இலஞ்சம், ஊழலற்ற - செயல் திறன்வாய்ந்த - சொல்லுக்கும் செயலுக்கும் ஒத்திசைவுள்ள இயக்கமாகவே செயற்படுகின்றோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சலுகைகளுக்கு விலைபோகாத, நேர்மையான அரசியல் பயணத்தையே முன்னெடுத்துவருகின்றோம். எமது அணியின் கொள்கை நிலைப்பாட்டைப் பலப்படுத்த, தமிழ் இனம் தனது வரலாற்றுக் கடமையை ஆற்றும்வகையில், உங்கள் தார்மீக ஆதரவை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் 'சைக்கிள்' சின்னத்துக்கு வழங்குமாறு அன்புரிமையுடன் வேண்டிநிற்கின்றோம்.

**தமிழ்த் தேசமாய் பேரெழுச்சி கொள்வோம்!**




**'இரு தேசங்கள் ஒரு நாடு'**
**இலக்கினை அடைய**
**ஒற்றைத் தலைமையில்**
**ஓரணியாவோம்!**

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

## சுயேட்சை குழு 13

**நீண்ட வரலாற்றுப் பின்னணியை கொண்ட யாழ் பல்கலையில் இருந்து ஒரு குரல் தமிழரின் குரலாக ஒலிக்கட்டும்!!**






**1 கி.கிருஷ்ணமீனன்**
யாழ்.பல்கலைக்கழக முன்னாள் மாணவர் ஒன்றியத் தலைவர்

யாழ் பல்கலைக்கழக முன்னாள் மாணவர் ஒன்றிய தலைவர் தலைமையிலான கறைபடியாத கரங்களை கொண்ட மாற்றத்திற்கான தமிழ் தேசிய இளைஞர் அணி




**தமிழ் மக்கள் கூட்டமைப்பு**

## பாராளுமன்றத் தேர்தல் 2024 யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்




முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் — சிரேஷ்ட சட்டத்தரணி — முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

**இரு தேசங்கள் ஒரு நாடு**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் கலந்து கொள்ளும்

**மாபெரும் பொதுக்கூட்டம்...!**

**10.11.2024 (ஞாயிறு) மல்லாகத்தில்...!**

**மாலை 4.30 மணிக்கு**

**மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம் முன்பாக**

**அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 அம்ச கொள்கைத் திட்டங்கள்

அங்கஜன் இராமநாதனின், மக்களின் வெற்றிக்கான செயற்றிட்டங்கள்



தபால்பெட்டி சின்னத்திற்கு வாக்களிப்பீர்

இருப்பியல்

வையத் தலைமை கொள்

## 1 அரசியல் தீர்விற்கான ஆணித்தரமான அழுத்தம்

- இருப்பைத் தக்கவைத்தல்
- சுயாட்சி அதிகாரம் மற்றும் சுய உரிமை ஆட்சிப்பொறிமுறை
- மீள் கட்டுமானம், காணி விடுவிப்பு மற்றும் மீள்குடியேற்றம்
- அரசியல் யாப்பு சீர்திருத்தம்
- முன்னாள் போராளிகள் மறுவாழ்வு
- பாதிக்கப்பட்டோருக்கான சொத்திழப்பீடு

## 2 மீண்டும் கல்வியில் முதலிடம்

- இலவச ஆரம்பநிலை தொழில்நுட்பக்கல்வி
- நிலைபேண்தகு அபிவிருத்தி கற்றல்-கற்பித்தல் முறைகள்
- பல்கலைக்கழக – தொழில்நிறுவன இணைப்பு
- கல்விசார் பௌதீக மற்றும் மனிதவள இடைவெளி நிரப்பல்
- திறன்விருத்தி சார் தொழிற்கல்வி
- பாடசாலைகளுக்கிடையே சமவளப்பங்கீடு

## 3 துரித பொருளாதார வளர்ச்சி

- உள்ளூர் உற்பத்திகளை வலுப்படுத்த உற்பத்திக் கிராமங்கள்
- பேண்தகு பொருளாதாரம்
- இயங்கா தொழிற்சாலைகளை மீண்டும் இயங்க வைத்தல்
- புதிய தொழிற்சாலைகள் அமைத்தல்
- சுற்றுலாத்துறை வணிகம்
- ஏற்றுமதிப் பொருளாதார முன்னுரிமை
- சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்களை வலுவூட்டல்
- திறன்வளம் கொண்ட தொழில் வல்லுநர்கள் உருவாக்கம்

## 4 விவசாயம், மீன்பிடி, கால்நடைத்துறைகளில் துரித மீளெழுச்சி

- உணவுத்தேவையில் தன்னிறைவு
- பேண்தகு விவசாயம்
- விவசாய நவீனமயமாக்கல்
- பேண்தகு மீன்பிடி
- கால்நடை பொருளாதார மேம்பாடு
- விவசாய, கால்நடை வளர்ப்புசார் தொழில்முனைவோர்
- பெறுமதிசேர் உற்பத்திகளின் அறிமுகம்

## 5 மொழி, கலை, கலாச்சார, பண்பாட்டு, இலக்கியப் புத்தாக்கம்

- கலைத்துறைகளின் ஊக்குவிப்பு மற்றும் கலைஞர்களுக்கு ஆதரவு
- தமிழ்மொழிக்கான அங்கீகாரம்
- பாரம்பரிய கலைகள் மற்றும் கலாச்சார மரபுகளை கற்றுத்தரும் மையங்கள்
- தமிழ்ப் பண்பாட்டுக் கலைகள் மற்றும் இலக்கியங்களை டிஜிட்டல் வடிவில் ஆவணப்படுத்தல்
- வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் திட்டங்கள், சிறு நூலகங்கள்
- தமிழ்ப் பண்பாட்டு மரபுரிமைகள் மற்றும் தொல்பொருட் சின்னங்களைப் பாதுகாத்தல்
- பிரதேச ரீதியில் கலை இலக்கிய வட்டங்களின் விருத்தி
- தமிழ் பண்பாட்டுத் திருவிழாக்கள் மற்றும் புத்தகக் கண்காட்சிகள்

## 6 அனைத்து தமிழ் உறவுகளையும் ஒரே புள்ளியில் இணைத்தல்

- புலம்பெயர் சமூக முதலீடுகள்
- வணிக கூட்டணிகள் மற்றும் வணிக முனைப்பாளர்களுக்கான ஆலோசனை மற்றும் ஆதரவுத்திட்டங்கள்
- தமிழ் பேசும் துறைசார்ந்த நிபுணர்களுக்கான வலையமைப்பு
- கல்வி மற்றும் வணிக அறிவுப்பரிமாற்றம்
- மக்களின் தேவைகளை முன்னிலைப்படுத்தும் "விடியலின் திசை" தளம்

## 7 உடல், உள நலன் மிக்க ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கல்

- சேதன உணவுப்பயன்பாடு
- நோய்க்கண்காணிப்பு
- மனநலம் மற்றும் உளவியல் நலனுக்கான வழிகாட்டல் மற்றும் வேலைத்திட்டம்
- சுற்றுச்சூழல் சுகாதார பராமரிப்பு
- இளைஞர்களுக்கான விளையாட்டுத் திட்டங்கள்

## 8 தொழில்நுட்பத்தை மையப்படுத்திய சமூகமொன்றை கட்டியெழுப்புதல்

- தொழில்நுட்பம் சார் கல்வி மற்றும் வல்லுநர்கள்
- உள்ளூர் தொழில்நுட்ப நிறுவன ஊக்குவிப்பு
- தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி மேம்பாடு
- கல்வி மற்றும் தொழில்நுட்ப இணைப்பு
- டிஜிட்டல் பயன்பாடு – சேவைகள், கட்டணம், தரவுத்தளம்
- டிஜிட்டல் பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் குற்றச்செயல்கள் தொடர்பான விழிப்புணர்வு

## 9 அறிவுபூர்வமான, சக்திமிக்க மகளிர், இளைஞர்களின் எதிர்காலம்

- இளம் தொழில்முனைவோருக்கான ஊக்குவிப்பு மற்றும் கடன்வசதி
- மகளிர் வலுவூட்டல்
- பாலியல், சிறுவர் துஷ்பிரயோகத்திற்கெதிரான நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு
- பாலின சமத்துவம் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைக்கெதிரான நிகழ்ச்சித்திட்டம்
- போதையற்ற சமூகம்
- விளையாட்டில் முதலிடம்
- கைத்தொழில் வளர்ச்சித்திட்டங்கள்
- முதலீட்டாளர் கருத்துக்களம் (Investor Forum )

## 10 இயற்கை, பௌதீக, ஆளணி வளங்களை மேம்படுத்தல்

- அனைவருக்கும் வீடு, குடிநீர், மின்சாரம், கழிப்பறை வசதி
- சகலருக்கும் பொதுவான அபிவிருத்தி
- அனர்த்த முகாமைத்துவத்தை மேம்படுத்தல்
- சக்தி வளங்களின் திறனான பயன்பாடு
- மேம்பட்ட வடிகால் அமைப்பு மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவத்துடன் இணைந்த பேண்தகு சூழல் முகாமைத்துவம்

X 1


ප්‍රජාතන්ත්‍රවාදී ජාතික සන්ධානය
ஜனநாயக தேசிய கூட்டணி
Democratic National Alliance

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊஞ்சல் சின்னம்

X 4

சுயேச்சைக் குழு - 2



## E.S.P. நாகரத்தினம் கமலரூபன்

சட்டத்தரணி, இளம் தொழில் முயற்சியாளர்

LL.B (Hons), BA (Economics) (University of Colombo)

நேர்மையான வினைத்திறன்மிக்க அரசியலுக்கு!
இளைஞர்களின் வருகையை ஆதரிப்போம்!

**"எமது இரண்டு வருட கால செயல்திட்ட முன்னேற்றங்களையும், 2030 மற்றும் 2050 ஆண்டுகளை நோக்கிய செயல்திட்ட முன்மொழிவுகளையும் 2026ஆம் ஆண்டு பொது மாநாட்டில் வெளியீடல்!"**

### அரசியல் தலைமைத்துவ கட்டமைப்பும் அரசியல் தீர்வும்

- அரசியலில் ஆர்வமும், அக்கறையும், இனப்பற்றும், தேசப்பற்றும் மிகுந்த இளைஞர்கள் மற்றும் யுவதிகளையும், ஆளுமை மிக்கவர்களையும் தேர்தல் அரசியலுக்குள் உள்வாங்குதல்.
- தமிழ் மக்கள் வரலாற்று ரீதியாக ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வருகின்ற இலங்கையின் வடக்கு, கிழக்கை உள்ளடக்கிய தமிழ்த்தேசிய பரப்பான சுயத்திலும், இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் (உ-ம்: கொழும்பு) மற்றும் உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழ்கின்ற எம்மக்களை ஒன்றிணைத்து ஓர் பலமான அரசியல் கட்டமைப்பை உருவாக்கல்.
- வடக்கு கிழக்கில் சுயாட்சி அரசியலை மேற்கொள்ள ஓர் கட்டமைப்பை உருவாக்குவதுடன் அதனை நடைமுறைப்படுத்த ஓர் புதிய அரசியல் அமைப்பு நோக்கிய நகர்வு.
- தமிழர் பரப்பில் 1948ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இனப்பரம்பலை மாற்றியமைக்கும் நோக்கோடு மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்கள் தொடர்பான புள்ளிவிபரங்களை திரட்டுதலும் அவ்வாறான செயற்பாட்டை எதிர்காலத்தில் இல்லாதொழித்தலும்.
- தமிழர் பரப்பில் பேரினவாத அரசாங்க செயற்பாட்டினால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளினது விடுவிப்பு, சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளினது விடுதலை மற்றும் இனப்படுகொலை தொடர்பான பொறுப்புக்கூறுதல் அத்துடன் ஏனைய அடக்குமுறைகளுக்கு எதிராக செயற்படல்.

### முயற்சியாண்மை

- அரசியல் தீர்வு எட்டும் வரை நம் சமூகத்தினது பொருளாதார மேம்பாட்டு விடயங்களை கையாளக்கூடிய நிபுணத்துவ குழாமை மாவட்ட ரீதியாக கட்டமைத்தல். அக்குழு உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகளை வடக்கு, கிழக்கை நோக்கி வரவழைக்கவும், அதனூடாக பொருளாதார நிலைபேறான அபிவிருத்தி (Economic Sustainable Development) அடையும் வழி வகைகளை உருவாக்கி, நடைமுறைப்படுத்தி, கண்காணித்தல்.
- தமிழர் பரப்பின் பொருளாதார துறைகளை முயற்சியாண்மை ஊடாக நவீனமயப்படுத்தி வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல்.
- நேரடி முதலீட்டு சூழலை ஊக்குவிப்பதற்கு பாதுகாப்பு உத்தரவாத ஏற்பாடுகள்.

### கல்வி

- ஆரம்பக்கல்வி, பாடசாலை, பல்கலைக்கழகம், தொழில்சார் கற்கை நெறிகள், வாழ்வியல் கற்கை நெறிகள் ஆகியவற்றை தரமுயர்த்துதல்.
- கிராமங்களிலிருந்து கல்வி நடவடிக்கைகளுக்காக நகரங்களை நோக்கி செல்வதை தடுக்கும் முகமாக கிராம மட்டங்களில் கல்வி கற்றல் செயற்பாட்டை மேம்படுத்தல்.
- எமது மாணவர்களின் பல ஆண்டு கால கற்கைகள் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற ஆய்வுக்கட்டுரைகளை ஆராய்ந்து அவற்றிற்கு உயிர்ப்பூட்டல்.

### விளையாட்டு

- வணிக ரீதியான கழக போட்டிகள் மூலம் விளையாட்டு வீரர்களை பொருளாதார ரீதியாக தரமுயர்த்துதல் மற்றும் பொழுதுபோக்கு ரீதியான போட்டிகள் மூலம் மக்களை வாழ்வியல் ரீதியாக வளப்படுத்தல்.
- விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துதல், விளையாட்டு கழக செயற்பாடுகளை ஊக்குவித்தல், மற்றும் விளையாட்டு போட்டிகள் மூலம் சமூக மேம்பாட்டை நிலைநாட்டல்.
- பாரம்பரிய விளையாட்டுக்களை நடாத்துவதன் மூலம் எமது தமிழர் கலாசாரத்தை தக்க வைத்தல்.

### கலை – கலாசாரம்

- தமிழர் பரப்பில் அருகிச்செல்லும் கலைகளை அழியவிடாது பாதுகாக்கும் ஆதரவுத்தளம் என்பது மிகக் குறைவாகவே உள்ளது. அதன் அடிப்படையில் கலைச்செயற்பாடுகளை தொடர்ந்தும் நிகழ்த்துதல், புத்தாக்க செயற்பாடுகள், மீளுருவாக்கச் செயற்பாடுகள் என்ற அடிப்படையில் கட்டமைத்தல்.
- தமிழர் விழுமியங்களை பறைசாற்றும் வகையில் ஓர் உயர்வான எமது கலாசார விழுமியங்களை அடுத்த சந்ததிக்கு எடுத்துச்செல்லல்.

### அறிவோம் – ஆழ்வோம் செயல்திட்டம்

அரசியல் ரீதியாக அரசியல் தலைமைத்துவ கட்டமைப்பும் அரசியல் தீர்வும், பொருளாதார ரீதியாக முயற்சியாண்மை, கல்வி, விளையாட்டு, கலை-கலாசாரம் என்பவற்றை உள்ளடக்கி ஓர் மேம்பாட்டினை அடையும் பொருட்டு விழிப்புணர்வு பட்டறைகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் மூலம் அரசியல் மற்றும் பொருளாதாரத்தை மக்கள் மயமாக்கல்!

### இரண்டு ஆண்டு கால செயல்திட்டம்

- எமது தமிழர் பரப்பான சுயத்திலும், புலத்திலும் பலமான கட்டமைப்பினை உருவாக்குதல்.
- யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில், எவ்வித கட்சி வேறுபாடுகளின்றி, ஒருமித்த நிலைப்பாட்டை ஏற்படுத்தி, அரசியல் தீர்வு மற்றும் பொருளாதார மேம்பாடு தொடர்பான பொதுத்தீர்மானத்தை நிறைவேற்றுதல்.
- இளைஞர் வேலைவாய்ப்புத்திட்டம்.
- அறிவோம் ஆழ்வோம் செயல்திட்டம்.
- போக்குவரத்து மேம்பாட்டுத்திட்டம்.

### 2030ஆம் ஆண்டை நோக்கிய செயல்திட்டம்

- தமிழர் தரப்பில் பலமான கட்டமைப்பை உருவாக்கி நிலையான நீடித்த அரசியல் தீர்வு முன்னெடுப்புக்கள்.
- விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் மற்றும் சேவைத்துறையில் தன்னிறைவான பொருளாதார மேம்பாட்டுடன் கூடிய செயல்திட்ட முன்மொழிவுகள்.
- 2050ஆம் ஆண்டை நோக்கிய கிராமங்களின் எழுச்சியையும் நகரத்தை நவீனமயப்படுத்துவதற்கான செயல்திட்ட முன்மொழிவுகள்.

### 2050ஆம் ஆண்டை நோக்கிய செயல்திட்டம்

- விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் மற்றும் சேவைத்துறையில் தன்னிறைவடைதல்.
- இளைஞர்களின் இருப்பை பலப்படுத்தி ஒரு சமூக, பொருளாதார கட்டமைப்பை உருவாக்குதல்.
- வளமான அமைதியான தேசம் என்ற உயர்நிலையை எட்டுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாராளுமன்றை சுத்தம் செய்வோம்!

# திசைகாட்டியால் நிரப்புவோம்

இனவாதத்தை தூண்டுபவர்களுக்குப் பதிலாக
**தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புபவர்கள்**


பொதுச் செல்வத்தை கொள்ளையடித்தவர்களுக்குப் பதிலாக
**அரசியலை மக்கள் சேவையாக மாற்றிக்கொண்டவர்கள்**

பாராளுமன்றத்தை திருட்டுக் குகையாக்கியவர்களுக்குப் பதிலாக
**வாகன பேர்மிற் - சம்பளம் எடுக்காதவர்கள்**

திருடர்கள் - ஊழல்பேர்வழிகள் - மோசடிப்பேர்வழிகளுக்குப் பதிலாக
**ஊழலற்ற - பரிசுத்தமான - நோக்கினை உடையவர்கள்**

நாட்டை நாசமாக்கும் சட்டங்களுக்காக கையை உயர்த்தியவர்களுக்குப் பதிலாக
**நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான அர்ப்பணிப்பு உடையவர்கள்**

நாட்டை வங்குரோத்து அடையச்செய்வித்த பழையவர்களுக்குப் பதிலாக
**வளமான நாட்டை உருவாக்குகின்ற smart ஆனவர்கள்**



திசைகாட்டியால் பாராளுமன்றத்தை நிரப்பிட நவெம்பர் 14 ஆந் திகதி வாக்களிப்பு நிலையத்திற்கு நீங்களும் வாருங்கள்.

**ජාතික ජන බලවේගය** தேசிய மக்கள் சக்தி **JATHIKA JANA BALAWEGAYA (NPP)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமான வாழ்வுக்கு வழிகாட்டி... நம் திசைகாட்டி




பாராளுமன்ற தேர்தல் - 2024
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்




- கோப்பாய் தொகுதி இளைஞர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சியங்களை ஒருபோதும் மௌனிக்கச் செய்யவிடோம்

## வேட்பாளர் வேந்தன் சபதம்

**யாழ்ப்பாணம், நவ. 10**

**ஒப்பற்ற தலைவனின் வழிநடத்தலில் தமிழ் மக்களின் விடிவுக்காக களமாடியவர்கள் நாங்கள். தலைவர் தலைமையிலான நிழல் அரசாங்கத்தின் கீழ் போராளிகளான நாங்கள் நேர்மையான நீதியான நிர்வாகத்தையே செய்திருக்கின்றோம். அவ்வாறான தூய்மையான ஓர் அரசியலைச் செய்வதற்கு எங்களுக்கு இந்தத் தேர்தலில் ஒரு சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.**

-இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி சார்பில் சங்குச் சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயக போராளிகள் கட்சித் தலைவர் சி.வேந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2009 இல் ஆயுதங்களே மௌனிப்பதாக தலைவர் அறிவித்தாரே தவிர இலட்சியத்தைக் கைவிடுவதாக கூறியிருக்கவில்லை என்ற அடிப்படையில் நாங்கள் களமிறங்கியுள்ளோம். இந்தத் தேர்தலில் அதற்கான அங்கீகாரத்தை தமிழ்மக்கள் வழங்க வேண்டும். போராளிகளைப் பொறுத்தவரையில் பல்வேறுபட்ட பிரச்சினைகளுடன் இந்தச் சமூகத்தில் வாழ்ந்து வருகின்றோம். பொருளாதாரப் பின்புலமின்றியும் பல போராளிகள் மற்றும் மாவீரர் குடும்பத்தினர் பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

தமிழ் மக்களுக்கான உண்மையான மாற்றாக போராளிகளாகிய நாங்கள் இருப்போம். மாற்றத்தை விரும்பும் தமிழ் மக்கள் இந்தத் தேர்தலின் மூலம் போராளிகளுக்கு அங்கீகாரத்தை வழங்கவேண்டும்- என்றார். (ச-100,26)

## தமிழ் மக்கள் கூட்டணிக்கு சமூக மேம்பாட்டுக் கழகம் ஆதரவு

யாழ்ப்பாணம், நவ. 10

சமூக மேம்பாட்டுக் கழகத்தின் அரசியல் பிரிவினர் தமிழ் மக்கள் கூட்டணியினருக்கு தமது ஆதரவை வழங்கியுள்ளனர். காரைநகர் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணன் கோவிந்தராஜன் மற்றும் முன்னாள் உபதவிசாளர் ஜெயகிருஸ்ணா ஆகியோர் தமது கழகத்தின் ஆதரவைத் தமிழ் மக்கள் கூட்டணியின் மான் சின்னத்தில் போட்டியிடும் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையிலான குழுவினருக்கு அளிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

தமிழ் மக்கள் கூட்டணியில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடும் சட்டத்தரணி வி. மணிவண்ணன் யாழ். மாநகரசபையின் முதல்வராக இருந்த இரண்டு ஆண்டுகளும் அதனை திறம்பட நடத்தி பல அபிவிருத்தியையும் முன்னெடுத்திருந்தார் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ச-100,20)


# சமரச அரசியலுக்குள் தமிழரசு பிரவேசிக்கும்

## வேட்பாளர் ரவீந்திரகுமாரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 10

இதுவரை காலமும் எதிர்ப்பு அரசியல் செய்ததால் எமது மக்கள் சந்தித்த வலிகள் வடுக்கள் நிறையவே உள்ளன. ஆகவே, வலிகள் வடுக்களைக் குறைக்கவேண்டுமானால் சமரச அரசியலுக்குள் இறங்க வேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் வன்னித் தேர்தல் மாவட்ட வேட்பாளர் ந. ரவீந்திரகுமாரன் தெரிவித்துள்ளார். தென்னிலங்கை தொலைக்காட்சி ஒன்றில் நடைபெற்ற கருத்தாடல் நிகழ்ச்சியில் பங்குகொண்டு கருத்துரைத்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உங்களுடைய அரசியல் எதிர்ப்பு அரசியலா? இணக்க அரசியலா? என்று நிகழ்ச்சித் தொகுப்பாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். வன்னியில் மக்கள்பட்ட வலிகளையும் வடுக்களையும் நீக்க வேண்டுமாக இருந்தால் சில சந்தர்ப்பங்களிலே தென்பகுதி அரசியலிலே அவர்கள் வைத்திருக்கின்ற கொள்கைகள், சித்தாந்தங்களை ஏற்று அவர்களுடன் இணைந்து செல்வது நிச்சயமாக தேவைப்படுவதாக இருக்கும். வலிகள், வடுக்களை குறைக்கவேண்டுமானால் சமரச அரசியலுக்கு முன்வரவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-100)




# சிறுவர் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்

யாழ்ப்பாணம், நவ.10

பாடசாலைச் சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்ட நிகழ்வு வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.சஞ்சீவன் தலைமையில், மருதனார்மடத்தில் அமைந்துள்ள வலிகாமம் கல்வி வலய அலுவலகக் கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சிறுவர் பாதுகாப்பு அலுவலர் மற்றும் உடுவில், தெல்லிப்பழை, சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த அதிபர்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்புக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (ச-25,66)

# தேங்காய் பால்மா; மவுசு அதிகரிப்பு

*யாழ்ப்பாணம், நவ.10*

தேங்காய் விலை அதிகரிப்பை அடுத்து தேங்காய் பால்மாவுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. தற்போது கூடுதலான நுகர்வோர் தேங்காய் பால்மா பைக்கற்றுகளை அதிகளவில் கொள்வனவு செய்து வருகின்றனர். யாழ்.குடாநாட்டில் தேங்காய் ஒன்றின் விலை 130 ரூபா முதல் 150 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. தேங்காய் விலை அதிகரிப்பால் சந்தைப்படுத்தலும் குறைந்துள்ளது. (ரி-25-17)

வன்னியை வசந்தமாக்கும் உங்கள் வன்னிமைந்தன்



கு.விஜேந்திரரத்தினம்
(விஜயன் J.P)
(விஜயா பில்டேர்ஸ்)


X 4

உங்களில் ஒருவனான என்னை பாராளுமன்றம் அனுப்பினால் கீழே குறிப்பிடப் பட்டுள்ள வேலைத்திட்டங்களை செய்து தருவேன் என்று உறுதி அளிக்கின்றேன்.

- எமது மாவட்டத்துக்காக அரசாங்கத்தால் ஒதுக்கப்படும் நிதியுதவியினை சரியான முறையில் முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்து எடுத்து உரிய காலத்துக்குள் செய்து முடிப்பதற்கு முயற்சி எடுப்பேன்.
- இடை நடுவில் அரசினால் கைவிடப்பட்ட வீதிகளை மீண்டும் செப்பனிடுவதற்கு அரசிடம் இருந்து நிதி உதவியினை பெற்றுவதற்கான முயற்சி எடுப்பேன்.
- நீண்ட காலமாக புனரமைக்கப்படாத குளங்களை புனரமைமைத்தல். ஆழப்படுத்தல் குளத்திற்கு நீர் வரும் வாய்க்கால்களை புனரமைத்தல் போன்ற பணிகள் அரச நிதி உதவியுடன் செய்வதற்கு முயற்சி எடுப்பேன்.
- அரசினால் மேற்கொள்ள இருக்கும் ஜப்பான் நிதியுதவியுடன் வரவிருக்கும் ஜெய்க்கா வேலை திட்டத்தினை முன்னுரிமை அடிப்படையில் உரிய காலத்தில் செய்து முடிப்பதற்கு அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவேன்.
- பாடசாலை மாணவர்கள் போதைப் பொருட்களுக்கு அடிமையாகாமல் இருப்பதற்காக அவர்கள் மத்தியில் விளையாட்டின்மேல் ஆர்வத்தை ஏற்படுத்தி ஒரு சிறந்த விளையாட்டு வீரனாக உருவாக்குவதுடன் உடல் ஆரோக்கியத்துடன் கூடிய ஒரு தலைமையின்கீழ் வாழக்கூடிய மாணவர்களாக உருவாக்குவதற்கு உதவிகளை மேற்கொள்வேன்.

ஜனநாயக தேசிய கூட்டணி
வன்னிதேர்தல் மாவட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெறுமதியான வாக்குகளை சிதறடித்து வீணாக்காதீர்கள்!

## ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், நவ. 10**

**எதிர்காலம் குறித்து சிந்திக்கும் அனைத்துத் தமிழ்மக்களும் தங்களது பெறுமதியான வாக்குகளை சிதறாமல், கழிவுப்பொருள்களாக மாற்றாது பாதுகாப்பது அவர்களது தலையாய கடமையாகும். நாமும் எம்மைச் சுற்றியுள்ளவர்களும் முழுமையாக எமது வாக்குகளைப் பயன்படுத்துவதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.**

-இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் செயலாளர் நா. இரட்ணலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் செறிந்து வாழும் மாவட்டங்களில் வாக்களிப்பு வீதங்கள் திருப்திகரமானதாக அமைவதில்லை.

தியாகங்கள் நிறைந்த ஆயுதப் போராட்டத்தின் தோல்வி, தமிழ்த் தலைமைகள் எனச் சொல்லிக் கொள்பவர்கள்சிலரின் சுயநலமான செயற்பாடுகள், தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் ஏராளமான பிரச்சினைகளுக்கு நீண்டகாலமாக தீர்வுகள் காணப்படாமை போன்ற பல காரணங்கள் தமிழ் மக்கள் தரப்பில் முன்வைக்கப்பட்டாலும் கூட அடிப்படையில் ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தின் இருப்பிற்கும் வேட்டு வைக்கக்கூடிய விதத்தில் நாம் எவரும் செயற்படுவது ஆரோக்கியமானதல்ல.

நாம் அளிக்கும் வாக்குகள் யாவும் பெறுமதிமிக்கவையாக, தீர்மானிக்கக் கூடியதாக அமையவேண்டும்.

தேர்தல் காலத்தில் வாக்காளர்களின் தீர்மானத்தில் வேட்பாளர் ஒருவரின் பிரதேசம், மதம், கல்வித் தகைமை, தனிப்பட்ட குணாதிசயங்கள் செல்வாக்குச் செலுத்துமென்பது நிதர்சனமானது.

ஆனாலும் அவ்வாறான எண்ணங்களும், போக்குகளும் தமிழ்த் தேசியத்தின் பலத்தைச் சிதைப்பதற்கு உதவியாக அமைந்துவிடக்கூடாது.

எனவே, தமிழர்களின் எதிர்காலம் குறித்துச் சிந்திக்கும் அனைத்து மக்களும் தங்களது பெறுமதியான வாக்குகளைச் சிதறாமல், கழிவுப் பொருட்களாக மாற்றாமல் பாதுகாப்பது அவர்களது தலையாயக் கடமையாகும் - என்றார். (ச)

# மக்களின் விடியலுக்காக அரசுடனும் பயணிப்பேன்

## அங்கஜன் தெரிவிப்பு



கடந்த காலங்களில் எவ்வாறு ஆட்சியில் இருந்த அரசாங்கங்களோடு இணைந்து செயற்பட்டு மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்ய பாடுபட்டதைப்போன்று இம்முறை தேர்தலில் வெற்றி பெற்ற பின்னரும் அமையவுள்ள புதிய அரசாங்கத்தோடு இணைந்து பயணிப்போம்-இவ்வாறு ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் யாழ்.தேர்தல் மாவட்ட பிரதான வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர் முடிந்து இத்தனையாண்டுகள் கடந்தும் எமது மக்கள் முன்னேறுவதற்குரிய வாய்ப்புகள் இருந்தும் அவற்றைப் பெற முயற்சிக்காமல் கைவிட்டவர்கள்தான், கடந்த கால தேர்தல்களில் மக்களது உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு அதிலிருந்து வாக்குகளைப் பெற்று வென்றபின்னர் அவற்றைப்பற்றியே சிந்திக்காதவர்கள். அப்படியானவர்களை இம்முறை மக்கள் நிச்சயம் நிராகரிப்பார்கள். தமக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிய மக்களை வாழ்வதற்கு வழி செய்து கொடுத்தவர்களையே இம்முறை மக்கள் தெரிவு செய்வார்கள்.

நான் மற்றவர்களைப் போன்று எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு எதையும் செய்யாது காலத்தையும் வீணடித்து மக்களையும் ஏமாற்றும் அரசியல்வாதியல்லை- என்றார். (ச-27)

# தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வினை எட்டுவோம்

## டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.10

மக்களாகிய நீங்கள் எமக்கு அரசியல் பிரதிநித்துவத்தினூடாக அதிகாரத்தை வழங்கினால் அதனூடாகத் தமிழ்மக்கள் எதிர்கொள்ளும் அனைத்துப் பிரச்சினை களுக்கும் தீர்வுகளைப் பெற்றுத்தர எம்மால் முடியும்.

- இவ்வாறு குருநகர் பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் மீதான எனக்குள்ள உணர்வுகளே இன்றுவரை நாடாளுமன்றில் என்னைப் பிரதிநிதி யாக்கவும் வைத்திருக்கின்றது. இம்முறையும் மக்கள் என்னை வெற்றிபெறச் செய்வார்கள். நடைமுறைச் சாத்தியமான எமது கொள்கை இன்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வலுப்பெற்றுள்ளது. அத்துடன் அரசியலுக்காகவோ அல்லது வாக்குக்காகவோ எதையும் நான் பேசுவதில்லை. மக்கள் நலன் சார்ந்தே எனது அனைத்து செயற்பாடுகளும் அமையும். அதனடிப்படையில் தமிழ் மக்களது பிரச்சினைகளுக் குத் தீர்வுகாண உறுதியாக இருக்கின்றேன்- என்றார். (ச-27)




# வெளிப்படைத்தன்மையில் வாக்கெண்ணும் பணிகள்

கொழும்பு, நவ. 10

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் வாக்குப்பெட்டிகள் யாவும் சீல் வைத்து பூட்டப்பட்டு வெளிப்படையாகவே எடுத்துச்செல்லப்படும் எனத் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வேட்பாளர்களின் பிரதிநிதிகள் விரும்பினால் வாக்குப்பெட்டிகளை எடுத்துச்செல்லும் வாகனத்தைப் பின் தொடர்ந்து செல்லலாம் எனவும் வாக்கெண்ணும் நிலையங்களில் பிற்பகல் 3.30 மணி முதல் வேட்பாளர்களின் பிரதிநிதிகள் முதல் பார்வையாளர்களாக அனுமதிக்கப்படுவார்கள் எனவும் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இரும்புப் பிடிக்குள் இறுகும் இலங்கை!

இலங்கை - அமெரிக்கா - இஸ்ரேல் - ஈரான் இந்த நான்கு நாடுகளையும் மையப்படுத்திய பாதுகாப்புக் கரிசனைகள், சர்வதேசப் பிரச்சினைகள், விசாரணைகள், விசாரணை வளையங்கள் உருவாகுவதற்கான சாத்தியங்கள் மிகமிக அதிகமாக ஏற்பட்டிருக்கின்றன. அமெரிக்க அதிபர் தேர்தலில் குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கிய ட்ரம்பைக் கொல்வதற்கு முயன்றார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஆப்கான் பிரஜையிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, அந்த நபர் இலங்கையில் வைத்து யூதர்கள் மீது சரமாரியான துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளச் சதித்திட்டம் தீட்டியதும் அம்பலமாகியிருக்கின்றது. இதையடுத்தே, இந்தச் சர்வதேசப் பதற்ற நிலைக்குள் இலங்கை வசமாக மாட்டியிருக்கின்றது.

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான உறவில் கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேலாக ஏகப்பட்ட பிரச்சினைகளும், பெருவிரிசல்களுமே ஏற்பட்டுள்ளன. ஈரானின் போர்த்தந்திரி என்று அறியப்பட்ட சுலைமானி, ட்ரம்பின் கடந்த ஆட்சிக் காலத்தில் கொல்லப்பட்ட பின்னர் இன்று உலகின் ஆகப்பெரும் பகை நாடுகள் என்றால், அதில் ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் தனித்த இடமுண்டு. ட்ரம்ப் அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள நிலையில், அவரைக் கொல்வதற்குத் திட்டமிட்ட விடயத்தையும், அதனோடு தொடர்புடைய இதர குற்றச்சாட்டுகளையும் அமெரிக்காவோ அல்லது இஸ்ரேலோ அவ்வளவு சாதாரணமாக எடுத்துவிட்டு நகரப்போவதில்லை.

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான மோதல் என்பது தூதரக - இராஜதந்திர விவகாரம் அல்ல. இது முழுக்கமுழுக்க ஆயுதங்களை மையப்படுத்தியது. ஈரானுடன் புதுப்பிக்கத்தக்க சாத்தியங்கள் அல்லாமல் உறவை முறித்திருக்கின்றது அமெரிக்கா. சீனா - இந்தியா விவகாரம் போன்று ஈரான் - அமெரிக்கா விவகாரத்தை இலங்கை அணுகமுடியாது - அணுகவும் கூடாது. எனவே தெரிந்தோ அல்லது தெரியாமலோ இலங்கை இப்போது ஒரு நரகப் பொறிக்குள் ஆட்பட்டுள்ளது என்பது உறுதி. இந்தப் பரந்துபட்ட பிரச்சினைகள் எதிர்காலத்தில் இராஜதந்திர ரீதியாகவும், டொலர் வருகையைத் துண்டிக்கக்கூடிய வகையில் நிகழ்காலத்திலும் பாரதூரமான பிரச்சினைகளை ஏற்படுத்தும். இஸ்ரேலால் இலங்கையர்களுக்கு வழங்கப்படும் வேலைவாய்ப்புகள் ஏராளம். அத்துடன் இலங்கைக்கு வரும் சுற்றுலாவிகளும் தாராளம். எனவே இலங்கைக்கு டொலர் வருகை இடம்பெற்றுக் கொண்டிருக்கும் பிரதான பாதைகள் தற்போது முற்றாக அடைபட்டுப் போகும் சாத்தியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த ஆபத்தில் இருந்து இலங்கை விடுபட வேண்டுமாயின், அர்ப்பணிப்பான இராஜதந்திரத்தை உடன் வெளிப்படுத்தவேண்டும். போகின்ற போக்கில் நகர்ந்து செல்லும் விடயம் இதுவல்ல.




# 2025 தொடக்கத்தில் உள்ளூராட்சித் தேர்தல்

**கொழும்பு, நவ. 10**

**உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஜனவரி ஆரம்பத்தில் நடைபெறுமெனவும் தேர்தல் பற்றிய அறிவித்தல் இந்த வருட இறுதியில் வெளியிடப்படுமெனவும் தேர்தல் ஆணையாளர் எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

2023 ஆம் ஆண்டு மார்ச் 9 ஆம் திகதி நடைபெறவேண்டிய உள்ளூராட்சித் தேர்தல் நிதிப்பற்றாக்குறை காரணமாக ஏப்ரல் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. எனினும் நிதிப்பற்றாக்குறை காரணமாக மீண்டும் காலவரையறையின்றி உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. இதனையடுத்து உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமைமீறல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம் இயன்றவரை விரைவாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு உத்தரவிட்டிருந்தது. இப்போது உரிய தரப்புகள் அனைவருடனும் தொடர்பு கொண்டு அடுத்த ஜனவரி ஆரம்பத்தில் தேர்தலை நடத்தத் தீர்மானித்துள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ச)

## வீதிகளைத் திருத்த நடவடிக்கை

கொழும்பு, நவ.10

பழுதடைந்த வீதிகளை திருத்தம் செய்யுமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

வீதி விபத்துகள் அதிகரிப்பதற்கு வீதிகள் பழுதடைந்துள்ளமையே காரணம் என வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயலர் ருவான் சந்திரா தெரிவித்துள்ளார். பழுதடைந்த வீதிகள் தொடர்பாக தமக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், அதனை அடையாளம் கண்டு சீர்செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ரி-6)

## அமைச்சர் ஹேரத் துறைமுகத்துக்கு விஜயம்

கொழும்பு, நவ.10

கொழும்புதுறைமுகத்திலிருந்து பொருள்கள் வெளியேற்றப்படுவதில் ஏற்படும் தாமதங்கள் குறித்து அமைச்சர் விஜித ஹேரத் ஆராய்ந்தார்.

கடந்த வியாழக்கிழமை கொழும்புத் துறைமுகத்துக்கு விஜயம் செய்த அமைச்சர் இப்பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடிய போது நிர்வாகச் சீர்கேடு, ஊழியர்களின் பொறுப்பீனம், அரசியல் செல்வாக்கின் காரணமாக ஊழியர்கள் கடமை நேரத்தில் தமது சொந்த அலுவல்களில் ஈடுபடல் போன்ற காரணங்களே துறைமுகத்திலிருந்து பொருள்கள் வெளியேற்றப்படுவதற்கு காரணம் என ஊழியர்கள் தெரிவித்தனர். (ரி-6)

## நிர்ணய விலையை மீறினால் சட்டம் உடன் பாயும்!

கட்டுப்பாட்டு விலையை விட கூடிய விலைக்கு அரிசியை விற்பனைசெய்தவிற்பனையாளர்கள் மீது பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபையினர் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

240 ரூபாவுக்கு அரிசியை விற்பனை செய்த 425 விற்பனை நிலையங்கள் பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபையினரால் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதே வேளை கட்டுப்பாட்டு விலையை காட்சிப்படுத்தாத 2000 வர்த்தக நிலையங்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-45-6)

## 'அஸ்வெசும' கொடுப்பனவு

'அஸ்வெசும' பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் நவம்பர் மாதத்துக்கான 'அஸ்வெசும' நலன்புரிக் கொடுப்பனவு தொகையை நாளை திங்கட்கிழமை வைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக 'அஸ்வெசும' நலன்புரி நன்மைகள்சபை தெரிவித்துள்ளது. எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் 'அஸ்வெசும' பயனாளிகள் தங்களது வங்கிக் கணக்குகளிலிருந்து கொடுப்பனவு தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-66)

**நாளை**

**11.11.2024**

திங்கட்கிழமை - ஐப்பசி - 25

சுபநேரம் : 12.06 - 01.36

ராகுகாலம் : 07.36 -09.06

**நாளொரு நல்வார்த்தை**

**"மரங்களை நேசிக்காத எவரும் இறைவனை நேசிப்பவர்கள் அல்லர்"**

-மூப்பர் அம்பிலோகியோஸ் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள் தேவை

கொழும்பில் அமைந்துள்ள தனியார் நிறுவனம் ஒன்றிற்கு மோல்டிங் மெசின் (Injection Molding Machine) இயக்குநர் / உதவியாளர் தேவை. அனுபவத்திற்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம், உணவு மற்றும் தங்குமிடவசதி செய்துதரப்படும். (cs.56635) (N-1)

**077 313 1934, 077 313 1937**

## வேலையாட்கள் தேவை

வடமராட்சிக்குட்பட்ட புகைப்படத்துறை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.
ஆர்வமுள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் தொடர்புகொள்ளவும்

**077 728 3706** (cs56632) (N-1)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1991 ஆண்டு பிறந்த பூராடம் 1ம் பாதம், 10 இல் சூரியன் செவ்வாய் உள்ள அரச உத்தியோகம் உள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (cs.56633) (N-1)

**077 044 0431**

## மணமகன் தேவை

**1996, இந்து, ஆயிலியம், ENGINEER
பூர்வீகம் - யாழ்ப்பாணம், வதியுமிடம் - SWISS
மணமகள் பதிவு இல: 11183.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
11.11 Festival Offer 12 Nov 2024 வரை
(30% Off, No Broker Commission,
Daily Deals & Bundle offer).**
(CS/29283 A) J-1

**www.EQMarriageService.com**

## வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு இணைந்த குளியலறையுடன் கூடிய சிறிய வீடு வாடகைக்குத்தேவை. (cs.56630) (N-1)

**077 454 0579**

## Angel International School, Manipay

## VACANCIES

### ACCOUNTANT / கணக்காளர்

**Requirements**

* C.I.M.A qualified / ACCA / ACA or equivalent OR
* AAT fully qualified
* Salary negotiable

### Driver / சாரதி

**Requirements**

* பஸ் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் பாரவூர்த்தி சாரதி அனுமதிப்பத்திரம் உடையவராக இருத்தல் வேண்டும்.
* வயதெல்லை: 35 - 60
* ஆகக்குறைந்தது 10 வருட அனுபவம்
* குறிப்பு: 3Km சுற்றுவட்டாரத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

**Further Details:**
**Mr. Jeevan: 077 844 8020**

**Angel International School, Mathers Lane, Manipay.**

## அகவை அறுபதில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்




எமது பாடசாலையின்
ஆசிரியரும் தர இணைப்பாளரும் ஆகிய

**திருமதி சூரியகலா தம்பிராசா**

அவர்கள் இன்று தனது அறுபதாவது அகவை தினத்தில் மணி விழாவினைக் கொண்டாடி மகிழ்கின்றார்.


எமது பாடசாலையின் வளர்ச்சிக்கும், உயர் சாதனைகளுக்கும் அர்ப்பணிப்புடன் நீண்ட காலம் எம்முடன் இணைந்து பணியாற்றிய இவரைப் பாராட்டி நன்றி கூறி வாழ்த்துத் தெரிவிப்பதோடு . இவர் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழவும் இவரது ஓய்வு காலம் மகிழ்வுடன் சிறக்கவும் என்றென்றும் வாழ்த்துகின்றோம்.

* 01.09.1992 – 2002.03.18 - கிளி / தர்மபுரம் மகா வித்தியாலயம்
* 18.03.2002 – 2006.03.03 - யா / புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
* 03.03.2006 – 2008.03.03 - தென்மராட்சி (Difficult)
* 03.03.2008 – 2008.10.15 - யா / சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை
* 15.10.2008 – 2009.02.25 - யா / மட்டுவில் தெற்கு வித்தியாலயம்
* 25.02.2009 – 2010.08.02 - யா / சாவகச்சேரி R.C
* 08.02.2010 – 05.01.2012 - யா / மிருசுவில் R.C
* 09.01.2012 – 10.11.2024 - யா / புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

வாழ்த்துவோர்:
**அதிபர், பிரதி அதிபர் , உபஅதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் யாழ்ப்பாணம்.** ((cs.56637) (N-1)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 27 . 08 . 1959



மறைவு 11 . 10 . 2024

**கடந்த 11.10.2024 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்**

**அமரர் இரத்தினம் ஜெயக்குமாரன்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (10.11.2024) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 05.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக் கிருத்தியக்கிரியைகள் அன்றயதினம் நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**நீதிமன்ற வீதி, மல்லாகம்.** (S/56639) J- **குடும்பத்தினர்**

## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 13. முஸ்லீம் கல்லூரி வீதி. ஆதன இல 217/16 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் அப்துல்காதர் பெண் எம்.எம்.பீ.பீ என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை முகைதீன் சகீப் சுல்தான் அப்துல்காதர் கைம்பெண் முகமட் உசன் பீபீ 21.08.1945ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எஸ்.எம்.எம்.அபூபக்கர் முகதாவில் 4927ம் இலக்க அறுதி உறுதி மூலம் முகமட் நயினா முகமட் மற்றும் பெண் செயநம்பு நாச்சியா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம். வண்ணார்பண்ணை தென்மேற்கு இறையில் முத்துமுகமட் செகு பரீட் மற்றும் பெண் பௌசான் அவர்கள் 01.10.2004ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எம். எம். எம்.ரமீஸ் முகதாவில் 677ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் தங்களுக்கு சீதனமாக வழங்கப்பட்ட உறுதி தொலைந்து விட்டதாக வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனத்தை செகு பரீட் பௌசான். செகு பரீட் ரஜ்லீன். செகு பரீட் ரஸ்மீன். செகு பரீட் ராஜ்லியா. செகு பரீட் முகமட் ரலீன். செகு பரீட் சிகான் ஆகியோர் 08.08.2012 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எம்.இமாம் முகதாவில் 1349ம் இலக்க அறுதி உறுதி மூலம் கௌரி தர்மராசா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவு யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட "கள்ளியடி" நிலப்பரப்பு 0 குளி 15.49 உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.சுப்பிரமணியம் அவர்களால் 11.02.2024ம் திகதி அளந்து வரைந்த 0377 இலக்க படத்தின்படி ( நிலப்பரப்பு பூச்சியம் குளி பதினைந்து தசம் நான்கு ஒன்பது.) கட்டடமும் பயிர்வகைகளும்.

**இதற்கு எல்லைகள்**

**கிழக்கு:** பீடி ஒழுங்கை.
**வடக்கு:** யுனைட் மஸ்றூனின் மிகுதி ஆதனம்
**மேற்கு:** ஒஸ்மானியா கல்லூரிக்குரிய ஆதனம்.
**தெற்கு :** எஸ்.யுனைத்தின் ஆதளம்.

**இதடங்கலும்**

தற்போது இவ்வாதனத்தை கௌரி தர்மராசா என்பவர் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம்செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும். உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது கௌரி தர்மராசா என்பவர் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்.
மாநகர சபை, யாழ்ப்பாணம்,** (cr.43629) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திறப்பு விழாவும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ்.ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலையில் புதிய திறன் வகுப்பறைத் திறப்பு விழாவும் மாணவர்களின் ஆக்கத்திறன் கண்காட்சியும் அதிபர் சிவசுப்பிரமணியம் நேதாஜி தலைமையில் சுன்னாகத்தில் அமைந்துள்ள பாடசாலை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ச-25, 6627)

## கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.10

சுயேச்சைக்குழு -13 இன் மாபெரும் பொதுக்கூட்டம் யாழ். பல்கலைக்கழக முன்னாள் மாணவர் ஒன்றியத் தலைவரும் வேட்பாளருமான கிருஷ்ணமீனன் தலைமையில் 'தேசத்துக்காய் ஒன்றிணைவோம்' எனும் தொனிப்பொருளில் திருநெல்வேலிச் சந்தி, ஆடியபாதம் வீதியிலுள்ள சிவகாமி மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நடைபெறவுள்ளது. (ச-45-10)

## கரவெட்டியில் பனை விதை நடுகை இன்று

யாழ்ப்பாணம், நவ.10

வடமராட்சி அபிவிருத்தி நிறுவகத்தின் ஏற்பாட்டில் ஒரு லட்சம் பனை விதை நடுகைத் திட்டத்தின் தொடர் நடவடிக்கையாக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் வடமராட்சி கரவெட்டி கப்பூது கிளான் மண் அணைப் பகுதியில் இடம்பெறவுள்ளது. (ச-66)

## முன்னணியின் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.10

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரின் மாபெரும் நாடாளுமன்றத் தேர்தல் இறுதிப் பிரசாரக் கூட்டம் நாளை திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் யாழ்ப்பாணம் பொஸ்கோ பாடசாலையின் அருகாமையில் அமைந்துள்ள இளங்கதிர் மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ச-66)



நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் சூரன்போர் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ரி-17)

## பட்டப்பகலில் வீடுபுகுந்து நகை, பணம் திருட்டு

பட்டப்பகலில் வீட்டின் பின்புறமாக புகுந்த திருடர்கள், நகை மற்றும் பணத்தை திருடிச் சென்றுள்ளனர் என சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் மீசாலை ஏ 9 பிரதான வீதியின் அருகிலுள்ள, ஆசிரியரொருவரின் வீட்டில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது. வீட்டில் குடும்பத்தினர் இருந்தவேளை வீட்டின் பின்புறமாக கூரையின் மேல் ஏறி ஓடுகளை கழட்டி உள்நுழைந்த திருடர்கள் அறையில் வைக்கப்பட்டிருந்த நகை மற்றும் பணம் என்பவற்றை கொள்ளையடித்து சென்றுள்ளனர் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-25, 131)



தம்பசிட்டி மலையந்தோட்டம் அருள்மிகு முருகன் கோவிலில் கந்தசஷ்டி திருவிழாவின் ஆறாம் நாள் பூசை வழிபாடுகள் கடந்த வியாழக்கிழமை சிறப்பான முறையில் இடம்பெற்றன. அபிசேகத்துடன் தொடர்ந்து பூசை வழிபாடுகள் இடம்பெற்று விரதகாரர்களுக்கு இளநீர், பிரசாதம் வழங்கி வைக்கப்பட்டது. (ச-25,100)



## செல்வச்சந்நிதியில் சூர சங்காரம்!

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். வடமராட்சி தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் கந்தசஷ்டி விரதத்தின் இறுதி நாள் சூரசங்காரம் கடந்த வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெற்றது. (ரி -27)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாளாக அமையும். மனஉறுதியுடன் செயல்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உங்களுடைய யோசனையை ஏற்றுக்கொள்வார்கள். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**இடபம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். சிலருக்கு தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தாயின் விருப்பத்தை பூர்த்தி செய்வீர்கள்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். பிள்ளைகளால் செலவுகள் ஏற்பட்டாலும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். ஒரு சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**கடகம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால் உற்சாகமாகக் காணப்படுவீர்கள். சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். இளைய சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதரர்கள் வழியில் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறுசிறு பிரச்னைகள் ஏற்படக் கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**கன்னி:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் சென்று குல தெய்வப் பிரார்த்தனை நிறைவேறும்.

**துலாம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாக செயல்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவி னர்கள் வருகையால் செலவுகள் ஏற்படும். ஆனாலும், உற்சாகத்துக்குக் குறைவிருக்காது.

**தனுசு:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையின் தேவையை நிறை வேற்றி மகிழும் வாய்ப்பு உண்டாகும். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள்.

**மகரம்:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை அரவணைத்துச் செல்வது அவசியம். முடிந்தவரை அவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவும்.

**கும்பம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக் கூடும் என்பதால், பேசும்போது பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக் கூடும்.

**மீனம்:** தாய்வழி உறவுகளால் நன்மை ஏற்படும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடர்களுக்கு மத்தியிலேயே கால்நடை மருத்துவசேவை

## கால்நடை மருத்துவ அதிகாரிகள் வடக்கு ஆளுநரிடம் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், நவ.10**

**வடக்கு மாகாணத்தில் கால்நடை மருத்துவ சேவையை வழங்குவதற்கு போதிய வளப்பற்றாக்குறை நிலவுகின்றது. இதற்கு பொருத்தமான பொறிமுறையை வகுக்க வேண்டும் என்று அரச கால்நடை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் வடக்கு ஆளுநரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.**



வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகனை கடந்த புதன்கிழமை சந்தித்தபோதே தமது பிரச்சினைகள் தொடர்பில் சுட்டிக்காட்டினர்.

இதன்போது கால்நடைப் பண்ணையாளர்களுக்கு உச்ச பட்ச சேவை வழங்குவதற்கு தடையாகவுள்ள பல இடர்பாடுகள் தொடர்பாக சங்கத்தினர் ஆளுநருக்கு தெரியப்படுத்தினர். விலங்குகளுக்கு சிகிச்சையளிப்பதற்கு தேவையான மருந்துகள் இன்மையும் அது தொடர்பான பொருத்தமான பொறிமுறை இன்மை தொடர்பாகவும் வாகனப் பற்றாக்குறை மற்றும் சாரதிகள் இன்மை தொடர்பாகவும் ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. மேலும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களமும் கால்நடை மருத்துவர்களும் மாகாணம் முழுதும் நடைமுறைப்படுத்தும் சேவைகள் தொடர்பாகவும் சட்டவிரோத சிகிச்சையாளர்களினால் பண்ணையாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாகவும் ஆளுநருக்கு தெரியப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் ஏனையவற்றை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து தீர்க்க முனைவதாகவும் ஆளுநர் உறுதியளித்திருந்தார். (ச-100)



## முருகன், நளினியுடன் சிவாஜிலிங்கம் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ. 10

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்ட முருகன், நளினி ஆகியோரை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் போட்டியிடும் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கடந்த வியாழக்கிழமை நேரில் சந்தித்து கலந்துரையாடினார்.

முருகன், நளினி தம்பதியர் லண்டனில் உள்ள தங்களது மகளிடம் செல்வதற்கு விண்ணப்பித்திருந்த நிலையில் அது நிராகரிக்கப்பட்டதை அடுத்து அவர்களின் மகள் மீண்டும் விண்ணப்பித்துள்ளதாக வும் அதன் முடிவுக்காக காத்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்ததாக எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (ச-100)



## விழிப்புணர்வுக் கருத்தமர்வு

கொழும்பு, நவ.10

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலின் போது வாக்களிப்பது எப்படி? என்பது தொடர்பான பொதுமக்களுக்கு விளக்கமளிக்கும் விழிப்புணர்வுக் கருத்தமர்வு கடந்த வியாழக்கிழமை காரைநகர் வடக்கு ஜே/46 கிராம அலுவலர் அலுவலகம், சக்கலாவோடைச் சந்தி, பிரதான தபால் நிலையம் மற்றும் இலங்கை வங்கி போன்ற இடங்களில் இடம்பெற்றன. இந்த விழிப்புணர்வுக் கருத்தமர்வு நிகழ்வில் காரைநகர் பிரதேசசெயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர். (ச-66)



மண்கும்பான் கிராமஅலுவலர் பிரிவைச் சேர்ந்த பொதுமக்களுக்கு நாடாளுமன்றத் தேர்தலில் எவ்வாறு வாக்களிப்பது? என்பது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை வேலணை உதவிப் பிரதேச செயலாளர் க.பார்த்தீபனால் நடத்தப்பட்டது. (ச-66)

## மடிச்சுக்கட்டித் தாக்கம் கட்டுப்படுத்துங்கள்

யாழ்ப்பாணம், நவ.10

யாழ். குடாநாட்டில் நெற்பயிர்ச்செய்கைகளில் மடிச்சுக்கட்டி நோயின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் விவசாயிகள் அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

விவசாயப் போதனாசிரியர்களிடம் நோயைக் கட்டுப்படுத்துவதற்கான ஆலோசனைகளைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அதற்கான விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் விவசாயத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-45-17)



## வடகீழ்ப் பருவப்பெயர்ச்சி முன்னாயத்த கலந்துரையாடல்

வடகீழ்ப் பருவப்பெயர்ச்சிக் காலநிலைக்கான முன்னாயத்தக் கலந்துரையாடல் கோப்பாய்ப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் கடந்த புதன்கிழமை பிரதேச செயலாளர் சண்முகராஜா சிவஸ்ரீ தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர், நிர்வாகக் கிராம அலுவலர், மாவட்டச் செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரதிப்பணிப்பாளர், மாவட்டச் செயலக அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர், நீர்ப்பாசனத்தி ணைக்களப் பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களத் தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர், இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர், உரும்பிராய் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உரும்பிராய், புத்தூர், கிராம அலுவலர்கள், கிராமமட்டப் பிரதிநிதிகள், கடற்தொழில் மற்றும் நீரியல் வளத்துறைத் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர், இராணுவ அதிகாரிகள் மற்றும் கோப்பாய்ப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ச-66)

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் கடந்த வியாழக்கிழமை சூரன்போர் சிறப்பாக இடம்பெற்றது. கற்சிலைமடு விநாயகர் ஆலயத்திலிருந்து சூரன்படை ஆயத்தமாகி ஒட்டுசுட்டான் தான்தோன்றிஸ்வரர் ஆலயத்தில் சூரசங்ஹாரம் இடம்பெற்றது. (ச-131)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பெண்களின் பங்களிப்பை அரசியலில் மேம்படுத்துக

## விழிப்புணர்வு வீதிநாடகம்

மன்னார்,நவ.10
தேர்தலில் பெண்களின் பங்கை அதிகரிக்கும் முகமாகவும் அரசியலில் பெண்களின் அங்கத்துவத்தை ஸ்திரப்படுத்துவதை நோக்காகவும் கொண்டு தயாரிக்கப்பட்ட விழிப்புணர்வு வீதி நாடகம் மன்னார் பேருந்து நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை நிகழ்த்தப்பட்டது.

மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவி மகாலட்சுமி குருசாந்தனின் ஒழுங்கமைப்பில் அரங்கேற்றப்பட்ட நாடகத்தை மன்னார் மாவட்டச் செயலர் கனகேஸ்வரன், மன்னார் மாவட்ட உதவி மாவட்டச் செயலாளர், அரச உத்தியோகத்தர்கள், மாதர் அபிவிருத்தி ஒன்றிய பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளடங்கலாக பலர் பார்வையிட்டனர். அதனைத் தொடர்ந்து குறித்த வீதி நாடகமானது நானாட்டான் பிரதேச செயலகத்துக்கு முன்பாகவும் நிகழ்த்தப்பட்டதுடன் மன்னார் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் பெண் அரசியல் பிரவேசம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நிகழ்த்தப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது . (ச-25,56)

# மேய்ச்சல்தரை நிலம் அடாத்தாக சுவீகரிப்பு

## மன்னார் மக்கள் முறைப்பாடு

மன்னார், நவ. 10
நானாட்டான் பிரதேச கால்நடை வளர்ப்பாளர்களுக்கு மேய்ச்சல் தரவைக்கு என ஒதுக்கப்பட்ட கட்டுக்கரைக்குளம், புல்லறுத்தான் கண்டல் பகுதியில் சிலர் அடாத்தாக விவசாயச் செய்கையில் ஈடுபட்டு வருவதாகப் பாதிக்கப்பட்ட கால்நடை வளர்ப்பாளர்கள் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர். நானாட்டான் பிரதேச கால்நடை வளர்ப்பாளர்களின் நீண்டகாலப் பிரச்சினையாக மேய்ச்சல் தரை காணப்படுகின்றது. கடந்த 2021 ஆம் ஆண்டில் இருந்து தமது கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை வழங்குவதாக அதிகாரிகள் தெரிவித்த போதும் இதுவரை வழங்கப்படவில்லை.

இந்தநிலையில் கட்டுக்கரை புல்ல றுத்தான்குளம் பகுதியில் 352 ஏக்கர் நிலப்பரப்பு மேய்ச்சல் தரவையாக வழங்க முடிவு செய்யப்பட்ட நிலையில் மேய்ச்சல் தரைக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் சிலர் அடாத்தாக நெற்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-56)

# நத்தார் தபால் முத்திரை சித்திரப்போட்டி முடிவுகள்

கிளிநொச்சி, நவ,10
கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம் மற்றும் முத்திரைப் பணியகம் ஆகியவற்றினால் நடத்தப்பட்ட நாடளாவிய நத்தார் தபால் முத்திரை சித்திரப்போட்டியின் முடிவுகளை தரப்படுத்தும் நிகழ்வு கிறிஸ்தவ கலாசாரப் பிரிவின் ஒழுங்கமைப்பில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. அதனடிப்படையில் மாவட்ட மட்டத்தில் 10 வயதுக்குட்பட்ட பிரிவில் முறுகண்டி குழந்தை இயேசு ஆலய மறைப்பாடசாலை மாணவன் க. ஜோரெக்ஸ் முதலாமிடத்தையும், பாரதிபுரம் புனித செபஸ்தியார் ஆலய மறைப் பாடசாலை மாணவன் ம.ஜெர்சன் இரண்டாமிடத்தையும், வட்டக்கச்சி புனித சூசையப்பர் ஆலய மறைப்பாடசாலை மாணவன் அ. திவாகர் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

10 - 15 வயதுப்பிரிவில் கிளிநொச்சி புனித திரேசாள் ஆலய மறைப்பாடசாலை மாணவி ஜெ.கரிஷ்மா முதலிடத்தையும், வட்டக்கச்சி புனித சூசையப்பர் ஆலய மறைப்பாடசாலை மாணவி றொ.டொசினா இரண்டாமிடத்தையும், தொண்டமான் நகர் புனித அந்தோனியார் ஆலய மறைப்பாடசாலை மாணவன் தி.கிர்த்திக் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

15 - 21 வயதுப்பிரிவில் உருத்திரபுரம் புனித பற்றிமா அன்னை மறைப்பாடசாலை மாணவி தி.வேணுஷா முதலிடத்தையும், கோணாவில் புனித செபஸ்தியார் ஆலய மறைப்பாடசாலை மாணவி ஞா.சன்சிகா இரண்டாமிடத்தையும், உருத்திரபுரம் புனித பற்றிமா அன்னை மறைப்பாடசாலை மாணவன் ம.மலரவன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

21 வயதுக்கு மேற்பட்ட பிரிவில் உருத்திரபுரம் புனித பற்றிமா அன்னை மறைப்பாடசாலை மறையாசிரியை திருமதி மேரி ஸ்றெல்லா சிம்சன் போல் முதலாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர். (ச-25,113)



# மீளாய்வுக் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ,10
பெண்கள், சிறுவர், இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சின் வேலைத் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், யாழ்.மாவட்ட மேலதிக செயலர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் , அமைச்சினால் வழங்கப்பட்ட உதவித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்றங்கள் மற்றும் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதில் ஏற்படும் சவால்கள் தொடர்பாக ஆராயப்பட்டன. அத்துடன் பெண்கள் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக அமைச்சினால் வழங்கப்பட்ட நிதிசார் முன்னேற்றம் தொடர்பில் பிரதேச செயலாளர் பிரிவுகளில் களத்தரிசிப்பும் முன்னெடுக்கப்பட்டது. (ச-25, 66)

# பரிசளிப்பு நிகழ்வு

கைதடி குருசாமி வித்தியாலயத்தின் பரிசளிப்பு நிகழ்வு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் ச.அகிலன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை மு.ப 10மணிக்கு இடம் பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.நவநீதன், சிறப்பு விருந்தினராக கைதடி குருசாமி வித்தியாலய ஓய்வு நிலை ஆசிரியர் திருமதி இந்திராதேவி சிவகுருநாதன், விருந்தினராக பழைய மாணவியும் அப்பாக்குட்டி நம்பிக்கை நிதிய உறுப்பினருமான திருமதி உதய யோகேஸ்வரி ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி-159)



# தெய்வீக இன்னிசை

கிளிநொச்சி, நவ,10
சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சிறப்புற இடம் பெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீட மாணவன் திலக்சன் சிவராஜ மனோகரனின் தெய்வீக இன்னிசை பக்கவாத்திய சகிதம் நடைபெற்றது. (ச-66)

# கீரைச்செய்கை மழையால் பாதிப்பு



யாழ்ப்பாணம், நவ.10
தற்போது பெய்துவரும் மழையினால் கீரைச்செய்கை பாதிப்படைந்துள்ளது. வலி. கிழக்குப் பிரதேசத்தில் தாழ்ந்த இடங்களில் பயிரிட்ட கீரைகள் வெள்ளம் ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் அவற்றின் விலை சடுதியாக அதிகரித்துள்ளதோடு ஒருபிடி கீரை 150 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றது. (ச-45-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறிய வீட்டுடன் காணி விற்பனைக்கு**

கே.கே.எஸ். வீதி, கொக்குவிலில் 1 பரப்புக் காணி சிறிய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

**076 039 2163**

(CS56643) J-1

**தேவை**

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பிரபல அழைப்பிதழ் காட்சியறைக்கு Sales and Admin Officer தேவை. Basic Computer Knowledge அவசியம்.

**TEL- 077 815 2693**

(CS56650) J-1

**உங்கள் கனவை நனவாக்க ...!**

**NVQ Level 3 & 4 Courses**

புதிய பிரிவுகள் ஆரம்பம் 25.11.2024

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு




- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
340, Pointpedro Road, Jaffna.
தொடர்பு:070 7070 722

# மரண அறிவித்தல்



தோற்றம் 24 . 03 . 1938

மறைவு 09 . 11 . 2024

## திருமதி தம்பிராசா கண்மணி

வேலணை மேற்கு 6 ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வேலணை கிழக்கு 2ம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா கண்மணி நேற்று (09.11.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தருமலிங்கம்-நாகம்மா தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா-தங்கம்மா தம்பதியின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும் ரவீந்திரன் (ஓய்வு நிலை அதிபர்) சகுந்தலாதேவி, தர்மராஜேந்திரன் (தலைவர் வேலணை ப.நோ. கூ.சங்கம்), விஜயேந்திரன், சந்திரவதனி (ஆசிரியர் யா/ வேலணை கிழக்கு. மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத்தாயாரும் கனகாம்பிகை, திருலோகநாதன், சத்தியபாமா (ஓய்வுநிலை ஆசிரியர்), சிவநந்தினி, சிறீரங்கன் ஆகியோரின் அன்பு மாமியாரும் மங்களம், சண்முகலிங்கம், விஜயலக்ஷ்மி, இலங்கைநாயகி, தருமராசா, (ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்), ரதிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பூபதி, கந்தசாமி மற்றும் பவானி, காலஞ்சென்ற பொன்னுத்துரை, மற்றும் செல்வராசா, சத்தியதேவி, முத்துலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ரிசிகேசன், வினோதினி, துசாசினி, துஷியந்தன், காலஞ்சென்ற தர்சிகன் மற்றும் நிலாஜினி, நிவேந்தா, பிரசன்னா, சஜீவன், சசிதரன்,சிந்துஜா, சிந்துசன், தர்மிலன், கஜீபன், சனா, வர்ஷன், பவிஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2024) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 01.00 மணிமணியளவில் வேலணை கிழக்கு 2ம் வட்டாரத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 381 6729
077 128 0329

தகவல்:
குடும்பத்தினர்

(CS 1810) V-1

# ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலும்



தோற்றம் 13 . 01 . 1953

மறைவு 02 . 10 . 2024

கடந்த 02.10.2024 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## திருமதி நல்லையா தனலட்சுமி (பவளம்)

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் இன்று (10.11.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இணுவில், மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிர மணியர் மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலை பேசிமூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், இறுதிச் சடங்கில் பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"ஸ்ரீசோதி வாசா"
பாப்பா தோட்ட வீதி,
இணுவில் மேற்கு, இணுவில்.

குடும்பத்தினர்

(CS/56647) J-1

# மரண அறிவித்தல்



மலர்வு 23 . 08 . 1947

உதிர்வு 09 . 11 . 2024

## கோடீஸ்வரன் சுப்புலச்சுமி

பூநகரியைப் பிறப்பிடமாகவும், ஓமந்தை, வைரவப்புளியங்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட, வவுனியா, ஓமந்தை ஆறுமுகம் ஸ்ரோஸ் உரிமையாளர் கோடீஸ்வரனின் அன்பு மனைவி சுப்புலச்சுமி அவர்கள் நேற்று (09.11.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - செல்லம்மா தம்பதியரின் மூன்றாவது புதல்வியும், காலஞ்சென்ற ஆறுமுகம் - தங்கமுத்து தம்பதியரின் மருமகளும், ஆ.கோடீஸ்வரனின் அன்பு மனைவியும், நகுலாம்பிகை, காலஞ்சென்ற சுந்தராம்பாள், பாலகிருஸ்ணன் மற்றும் பாலச்சந்திரன் (சுவிஸ்), றஞ்சிதமலர் (நோர்வே), புஸ்பராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரசாந்தி, குணசாந்தி, மதனசாந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், அரவிந்தன் (லண்டன்), ராஜரூபன் (கொழும்பு), Dr.திருவேகரன் (வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவானி, ராகுல், நேத்திரா, ஆதவன், கவின், நிரந்தனா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், சுப்பிரமணியம், சிவராமா, தங்கராசா, புவனேஸ்வரி, சந்திரரோதயம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.11.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் வைரவப் புளியங்குளத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
மருமகன் (Dr.திருவேகரன்) - 077 060 7123

(CR/43663) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுக மாகின்றது இணைய்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவு செய்யமுடியும். பதிவுக்கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்.

Ts& Cs apply WWW.inaipa.com

## வீட்டு வேலையாள் தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டு வேலைக்கு ஆள் தேவை (பெண்). அருகில் இருப்போர் விரும்பத்தக்கது. சம்பளம் நாள் ஒன்றுக்கு 1500 ரூபாய்

தொடர்புகளுக்கு:

0777 89 88 62

## மாடி வீடு விற்பனைக்குள்ளது

சுண்டிக்குளி பாடசாலையில் இருந்து 300M தூரத்தில் 2 கடையுடன் கூடிய மாடி வீடு விற்பனைக்குள்ளது.

1 3/4 பரப்பு, 6000 சதுர அடி,

**Ground Floor 2 shop, First Floor 7 Rooms / Attached Barthroom/ Hall**

தொடர்புகளுக்கு: 076 7725 781 077 411 8851

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

யாழ். மாநகரை தளமாக கொண்டு இயங்கிவரும் பிரபல மின்னியல் சாதன விற்பனைக் காட்சியறை ஒன்றிற்கு சிறந்த விற்பனைப் பிரதிநிதிகளை எதிர்பார்க்கின்றோம்.

தொடர்புகளுக்கு:

077 966 9498


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 08.10.2024 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

அமரர்

### சற்குணானந்த ஸ்ரீஸ்கந்தராஜா மீராதேவி

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (10.11.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

போட்டோஸ்ரீ K.K.S. வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

குடும்பத்தினர்.
தொ.பே.இல:076 688 9993

(CS 1814) A-1

## திடீர் சுகவீனமுற்று ஆசிரியை இறப்பு!

வவுனியா வடக்கு நெடுங்கேணி சேனைப்பிலவு திடீர் சுகவீனமுற்று மயக்கமடைந்த ஆசிரியை சிகிச்சையின்போது நேற்றுமுன் தினம் உயிரிழந்துள்ளார்.

சுபாஜினி தயானந்தன் (வயது–47) என்ற ஆசிரியையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இரண்டு நாள்களுக்கு முன்னர், பாடசாலைக்குச் செல்வதற்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்த போது அந்த ஆசிரியை மயங்கி வீழ்ந்துள்ளார். இதையடுத்து நெடுங்கேணி மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில், அங்கு சிகிச்சையின் போது உயிரிழந்துள்ளார். (ம–19)


## எலெக்ரீஷியன் தேவை

யாழ். நிறுவனத்தில் நிரந்தர அடிப்படையில் A/L படித்த Electrician உடன் தேவை.

தொடர்பு: 077 3444 801

## வீடு வாடகைக்கு

மானிப்பாய், சங்குவேலியில், மானிப்பாய் Town இல் இருந்து 1Km தூரத்தில் 3 அறைகள், Hall, Kitchen, Parking with all Furniture உடனான வீடு வாடகைக்கு உண்டு. Holi Day Home ற்கும் உகந்தது. ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.

077 734 3111

(CR/43659) J-1

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் ( V ) 2001 ம் ஆண்டு பூர நட்சத்திரம் சிம்ம ராசி விவாகரத்து பெற்ற மணமகளுக்கு மணமகன் (வெளிநாடு) தேவை.

076 311 2215

## பணிப்பெண் தேவை

யாழ் நகரையண்டிய பகுதியில் (வீட்டில் தங்கியிருந்து) வீட்டுவேலை, சமையல் வேலை செய்யக்கூடிய வீட்டுப்பணிப்பெண் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 074 137 5818

## மணமகன் தேவை

1998, இந்து, பூசம், HR EXECUTIVE OFFICER
பூர்வீகம் – யாழ்ப்பாணம், வதியுமிடம் – வத்தளை
மணமகள் பதிவு இல: 11194.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
11.11 Festival Offer 12 Nov 2024 வரை
(30% Off, No Broker Commission, Daily Deals & Bundle offer).
www.EQMarriageService.com

(CS/29263 B) J-1

## மணமகன் தேவை

1997, இந்து, அனுசம், PROJECT MANAGER
பூர்வீகம் – காங்கேசன்துறை, வதியுமிடம் – SWISS
மணமகள் பதிவு இல: 11173.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
11.11 Festival Offer 12 Nov 2024 வரை
(30% Off, No Broker Commission, Daily Deals & Bundle offer).
www.EQMarriageService.com

(CS/29263 D) J-1

## மணமகன் தேவை

1982, இந்து, கார்த்திகை, ASST. MANAGER
பூர்வீகம் – யாழ்ப்பாணம், வதியுமிடம் – வவுனியா
மணமகள் பதிவு இல: 11162.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
11.11 Festival Offer 12 Nov 2024 வரை
(30% Off, No Broker Commission, Daily Deals & Bundle offer).
www.EQMarriageService.com

(CS/29263 C) J-1

## வீடு வாடகைக்குத் தேவை

நல்லூர், கந்தர்மடம் பகுதியில்.

தொடர்புகளுக்கு:-

077 134 0831, 077 899 6410

(CS/29265) J-1


## மரண அறிவித்தல்



### செல்வி கார்த்திகேசு புஷ்பமலர்

மல்லாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கார்த்திகேசு புஷ்பமலர் அவர்கள் 09.11.2024 சனிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

இவர் அமரர்களான கார்த்திகேசு-மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும் அருந்ததி, புஷ்பராணி, சிறீதரன், சிவநேசன் (ஓய்வு பெற்ற தபாலதிபர்), காலஞ்சென்ற செல்வராணி, ஜெயராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் வி. லோகேஸ்வரன் சு.செல்வநாயகம் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2024) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் மல்லாகம் இந்து மயானத்தில் இடம்பெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 992 0202

நேரியம்பனை,
மல்லாகம்

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 10 . 1937



மறைவு 08 . 11 . 2024

### சின்னத்தம்பி வினாசித்தம்பி

**(ஓய்வு நிலை கிராம சேவையாளர், விசேட தரம், சமாதான நீதவான்)**

பேராலை, பளையைப் பிறப்பிடமாகவும், பளை நகரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வினாசித்தம்பி அவர்கள் நேற்றுமுன்தினம் (08.11.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சௌந்தரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செல்லம்மா (ஓய்வு நிலை அதிபர்) அவர்களின் அன்புக் கணவரும், செல்வி முத்துப்பிள்ளை (ஓய்வு நிலை விவசாயப் போதனாசிரியர்), காலஞ்சென்ற பரமேஸ்வரி (ஆசிரியர்) ஆகியோரின் சகோதரரும், இளங்கோ (அவுஸ்திரேலியா), லோகேஸ்வரி (இலண்டன்), மனோறஞ்சிதமலர் (இலண்டன்), செல்வி Dr. பவானி (மாவட்ட பொது வைத்தியசாலை - கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வளர்மதி (அவுஸ்திரேலியா), ஜெயக்குமார் (இலண்டன்), சாந்திகுமார் (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற இராசையா (ஓய்வு நிலை மேலதிக மாவட்டப் பதிவாளர்), செல்வி வே.இராசலட்சுமி, மனோகரதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பாதுசன், சர்மிலா, ஜெயந்த், காயத்திரி, நிசாளினி, ஜனகன், எழிலஜன், எழிலஜனி, மேகலநாத், யுவகீசன், அபிரா, ஹரி, தருண்றாம் ஆகியோரின் அன்புப் பேரனும், கிருத்விக்கின் பூட்டனும், ஹரிகரனின் பெரியதந்தையும், கோகுலகிருஷ்ணன், ஜெயகிருஷ்ணன் ஆகியோரின் தாய் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.11.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பேராலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 452 2623

"தாயகம்"
பளை நகரம், பளை.

(CS/56644).J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வர்த்தகக் கண்காட்சியும் விற்பனைச் சந்தையும்

யாழ்ப்பாணம், நவ.10
உடுவில் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் செளபாக்கியா உற்பத்திக் கிராமத் திட்டச் சந்தை மற்றும் வர்த்தகக் கண்காட்சி சுன்னாகம் பிரதான பேருந்துத் தரிப்பிட நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் உடுவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சிறுதொழில் முயற்சியாளர்கள் பலரும் தமது உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்ததுடன் ஏராளமான பொதுமக்கள் பொருட்களைக் கொள்வனவு செய்வதிலும் மிகவும் ஆர்வம் காட்டினர். (௯-25,66)



# வல்லைப் பகுதியில் பனம்விதை நடுகை!

கொழும்பு, நவ. 10
மரம் நடுகை மாதத்தை முன்னிட்டு வடமராட்சி வல்லைப் பகுதியில் பனம் விதை நடுகை செயற்றிட்டம் கடந்த புதன்கிழமை வடமராட்சி ஊடக இல்லத்தினரால் முன்னெடுக்கப்பட்டது.
யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தின் சமூக செயற்பாட்டுத் திட்டத்துக்கமைவாக மரநடுகை மாதத்தை முன்னிட்டு பனம் விதை நடுகைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (௯-100)

**காணி விற்பனைக்கு**
**இயக்கச்சியில் காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.**
தொடர்பு:- 077 089 3283

**வாடகைக்கு**
கடை - கஸ்தூரியார் வீதி
மேல்மாடி பில்டிங் - நாவலர் வீதி 2700 ச.அடி
நாற்சார் வீடு - கந்தர்மடம்
கம்பனி நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 076 071 2676 / 077 665 9736 / 021 222 3479

**Rooms Available (Kandy)**
**Rooms and Restaurant**
- Single, Double, Triple and Family rooms available
- ஆரம்ப விலை 3500/= இலிருந்து...
- தலதா மாளிகையிலிருந்து 1.5 km தூரத்தில் அமைந்துள்ளது.
- காலை, மதிய மற்றும் இரவு உணவுகள் பெற்றுக்கொள்ள முடியும்.

தமிழ் : 076 5599 839
English : 076 128 4493
(CS 1815) A-1

**அரச அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விசா ஏஜென்சி**
கங்கேரி Work VISA
இத்தாலி Work VISA
நியூஸிலாந்து Work VISA
UK Work VISA
VISIT VISA
France - 03 வாரங்கள்
Itally - 01 Month
போலந்து Settlement VISA 5வருடம் (2 மாதம்)
Student VISA, Work VISA, MOLTA (2 மாதம்)
தொடர்பு : 077 6040373
T.P: +244 303003
mkvisaworld@gmail.com
வட்ஸ்அப் 074 035 2940

## 21ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**அமரர் திருமதி ராஜமணி தேவபாலசுந்தரம் (மணி டீச்சர்)**
**(ஓய்வுநிலை அதிபர் யாழ் / கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்)**

**எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எம்மை நல்வழி நடாத்திய எங்கள் குடும்பத்தலைவி சிவபதம் அடைந்த செய்தி கேட்டதும் உடன் வந்து உதவி செய்ததோடு, மரணச் சடங்கிலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர் மற்றும் மலர்வளையம் சாத்தியோருக்கும் பல்வேறு வழிகளிலும் உதவிய உள்ளங்கள் அனைவருக்கும் எமது அன்பார்ந்த நன்றிகளை மனமுவர்ந்து இத்தால் நவில்கின்றோம்.**

அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனை எதிர்வரும் சனிக்கிழமை 16.11.2024 காலை 11.00 மணியளவில் பம்பலப்பிட்டி அரச, அடுக்குமாடித்தொடர் சமூக நிலையத்தில் (Bambalapitiya Flats Community Center) நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மகன் - தேவநேசன் குடும்பம் [illegible]**

## 31ம் நாள் நினைவஞ்சலி



எமது பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு சி.மதனரூபன் அவர்களின் பாசமிகு தாயார்

**அமரர் சிவகுரு பார்வதி**

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

தோற்றம் 08.03.1938 மறைவு 11.10.2024

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!
பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும் உத்தியோகத்தர் நலம்புரிச்சங்கம், பிரதேச செயலகம், வேலணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோப்பாயில் இன்று குருதிக்கொடை!

யாழ்ப்பாணம், நவ. 10

வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் அமரர் இலகுநாதன் செந்தூரனின் அகவை நாள் நினைவாக கோப்பாய் வாழ் மகிழடி இளைஞர்கள், ஸ்ரீசபாபதி நாவலர் விளையாட்டுக் கழகம், ஸ்ரீசபாபதி நாவலர் சனசமூக நிலையம், கோப்பாய் விளையாட்டுக் கழகம், கோப்பாய் வடக்குச் சனசமூக நிலையம் கோப்பாய் வடக்கு இளைஞர் கழகம், இளம்பராயத்தினர் மற்றும் இளைஞர்களுக்கான சிநேகபூர்வமான சுகாதார சேவைகள் அமைப்பு ,கோப்பாய் பொது அமைப்புக்களும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள குருதிக் கொடை முகாம் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் இடம்பெறவுள்ளது. (அ-ம-66)

# அபிவிருத்தியில் மன்னாரே பின்தங்கிய மாவட்டம்

## பிரதமரிடம் மன்னார் ஆயர் சுட்டிக்காட்டு

மன்னார், நவ.10

மன்னார் மாவட்டம் பல துறைகளிலும் அபிருவிருத்தியில் பின் தங்கிக் காணப்படுவதால் அதன் அபிவிருத்தி தொடர்பிலும் கவனம் செலுத்தவேண்டும் என்று மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி தேர்தல் பரப்புரைக்காக கடந்த திங்கட்கிழமை மன்னாருக்கு வருகை தந்த பிரதமர் ஹரிணி அமரசூரிய மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது மன்னார் மறைமாவட்டத்துக்கு சொந்தமான மற்றும் பொதுமக்களின் காணிகள் மற்றும் வயல் நிலங்களுக்கு உறுதிகள் இருக்கின்றபோதும் வனவளத் திணைக்களம் மற்றும் தொல்பொருள் திணைக்கள ங்கள் அடாத்தாக அபகரித்து வைத்துள் ளது.

மன்னார் தீவில் கனியவள மணல் அகழ்வு மற்றும் காற்றாலை அமைப்பதனால் இந்தப் பகுதி மக்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் அபிவிருத்தியானது மந்தகதியிலேயே காணப்படுவதால் பிற மாவட்டங்களை நம்பியே இங்குள்ள நோயாளர்கள் காணப்படுகின்றனர்-இவ்வாறு மன்னார் மாவட்டத்தின் பல தேவைகளையும் அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டிய அவசியத்தையும் மன்னார் ஆயர் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு சென்றார். (ச-60)

## நாடாளுமன்றத் தேர்தல்; மக்கள் மன்றம் நேற்று!

"நாடாளுமன்றத் தேர்தலில் உங்கள் கட்சிக்கு ஏன் வாக்களிக்க வேண்டும்? தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு என்ன?" எனும் தொனிப்பொருளில் தமிழ்க் கட்சிகள் பங்குபற்றிய மக்கள் மன்றம் நிகழ்வு நேற்று நடைபெற்றது.



தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வி. எஸ்.சிவகரன் தலைமையில் யாழ்ப்பாணம் கலைத்தூது மண்டபத்தில் நேற்றுக் காலை இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன் போது தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளர்கள் சிவில் சமூகப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு தத்தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

தமிழரசுக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சுயேட்சைக் குழுவின் 14இன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் சட்டத்தரணி வி.மணிவண்ணண், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் சார்பில் என்.சிறிகாந்தா ஆகியோர் அரசியல் பிரதிநிதிகளாக கலந்துகொண்டனர்.

இதேபோன்று சிவில் சமூகத்தின் சார்பில் அருட்தந்தை ஜெயக்குமார் அடிகளார், யாழ் பல்கலைக்கழக அரசறிவியல்துறை விரிவுரையாளர் கலாநிதி விக்னேஸ்வரன், சட்டத்துறை விரிவுரையாளர் கோசலை மதன் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். (ம-20-26)

## உடையார்கட்டு பகுதியில் இடியனுடன் ஒருவர் கைது!

முல்லைத்தீவு, நவ. 10

புதுக்குடியிருப்பு உடையார்கட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் இடியன் துப்பாக்கியை வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. விசாரணைகளின் பின்னர் அவர் சான்றுப் பொருள்களுடன் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார். (ம-19)

### ஜனாதிபதி...

களிலும் பிரதான தேசியக்கட்சிகள் தீவிரமான பரப்புரைகளை முன்னெடுத்து வரும் நிலையில், தமிழர் பகுதிகளில் கடந்த சில தினங்களாக தேசிய மக்கள் சக்தி கடும் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றது.

பிரதமர் ஹரிணி, ஜனாதிபதியின் ஆலோசகர் பிமல் ரத்நாயக்க ஆகியோர் இதற்கு முன்னர் வடக்குக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பரப்புரைகளை மேற்கொண்டிருந்தனர். இதன் தொடர்ச்சியாகவே, ஜனாதிபதி அநுர வடக்கில் இன்று தீவிர பரப்புரைகளை முன்னெடுக்கவுள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் படையினரின் வசமுள்ள காணிகளின் விடுவிப்புத் தொடர்பில் ஜனாதிபதி அநுர இன்று முக்கியமான சில அறிவிப்புகளை வெளியிட வாய்ப்புள்ளதாக எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன், இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலும் அவர் கருத்துகளை வெளிப்படுத்துவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஜனாதிபதியாக அநுர பொறுப்பேற்ற பின்னர் அவர் வடக்குக்கு மேற்கொள்ளும் முதலாவது பயணம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-110)

### நவம்பர்...

நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து, நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடர் நவம்பர் மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. பொதுத்தேர்தலில் வென்றவர்கள் அன்றையதினம் நாடாளுமன்ற உறுப்பினராக உறுதியேற்பார்கள்.

சபாநாயகர் தேர்வு உள்ளிட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், அன்றைய தினமே புதிய அமைச்சரவை பதவியேற்கவுள்ளது என்று அறியமுடிகின்றது. 25 அமைச்சுகள் மற்றும் அமைச்சுகளுக்கான அரச நிறுவனங்கள் என்பன தற்போது ஒதுக்கப்பட்டு இறுதிப்படுத்தப்பட்டுள்ளன. 25 தொடக்கம் 30 வரையிலான பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள். இராஜாங்க அமைச்சுப் பதவிகள் நீக்கப்பட்டுள்ளன. (அ-ம-44-இ)

### பொதுத்...

நிலையில், தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுவதற்காக சர்வதேச அமைப்புகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்கள் பகுதி பகுதியாக இலங்கைக்கு வந்துகொண்டிருந்தனர். இவ்வாறாக தற்போதுவரை 50 கண்காணிப்பாளர்கள் இலங்கையில் முகாமிட்டுள்ளனர் என்றும், அவர்கள் இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் கண்காணிப்புப் பணியில் ஈடுபடவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம், ஆசியத் தேர்தல் கண்காணிப்பகம், சார்க் வலய நாடுகள் மற்றும் ரஷ்யா ஆகியவற்றைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களே இவ்வாறு கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-ம-66)

### மண்வெட்டியால்...

இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ஈச்சங்குளம் அம்மிவைத்தான் பகுதியில் உள்ள தனது வீட்டில் குறித்த பெண் தனிமையில் இருந்தபோதே அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தமது முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் தப்பிச்சென்றுள்ள நிலையில் அவரைக் கைதுசெய்யும் நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-110)

### இலங்கையில்...

அமெரிக்க அதிபர் தேர்தலில் குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட ட்ரம்பை, கொலைசெய்வதற்குத் திட்டமிட்டார் என்ற குற்றச்சாட்டில் ஆப்கான் நாட்டவர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்போதே, இலங்கையில் யூதர்கள் மீது சரமாரியான துப்பாக்கிச்சூடு நடத்தி அவர்களைக் கொல்லும் பொறுப்பும் அந்த ஆப்கானியரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததாகவும், ஈரான் புரட்சிகர காவல் படையினரால் இந்தக் குற்றச்செயல்கள் ஒழுங்கமைக்கப்பட்டதாகவும் அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டுகளை திட்டவட்டமாக மறுத்துள்ள ஈரான், இவை ஆதாரமற்ற போலிப் பரப்புரைகள் என்றும் தெரிவித்துள்ளது. இந்தப் பிந்திய குற்றச்சாட்டுகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் எந்தக் கருத்தையும் வெளிப்படுத்தவில்லை. (அ-ம-இ)

### ஆயிரத்துக்கும்...

அந்தச் சட்டவிரோத மரக்களஞ்சிய சாலையை நடத்திவந்த குற்றச்சாட்டில் கஜீவத்தைக்குப் பொறுப்பான அத்தியட்சகர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதுடன், சான்றுப் பொருள்களை நீதிமன்றத்தில் பாரப்படுத்தும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-ரி-60)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ் இந்து (V) 1984 சுவாதி நட்சத்திரத்தில் பிறந்த தற்போது பிரான்ஸில் வசிக்கும் மணமகனிற்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(CS/56643) J-1

**077 597 1757**



# மரநடுகை

யாழ்ப்பாணம், நவ. 10

இன்பக்கரம் அறக்கட்டளை அமைப்பினூடாக 'முன்பள்ளியை அழகுபடுத்தலும் மரநடுகையும்' என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், தென்மராட்சி வரணி நாவற்காடு வாணி முன்பள்ளியினரின் மரநடுகை நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

முன்பள்ளி முகாமைத்துவக் குழுத் தலைவர் சு. கலீபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சாவகச்சேரி பிரதேசசபை முன்னாள் உறுப்பினரும், நிகழ்வுக்கு நிதிப்பங்களிப்புச் செய்த சமூக சேவகருமான சி.பிரபாகரன், ஆயுள்வேதவைத்தியர் வி.மிராஜ், இன்பக்கரம் அறக்கட்டளையின் நிறுவுநரும் ஊடகவியலாளருமான இ. நிறஞ்சன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தனர்.

(ச-25, 159)

## பணியாளர்கள் உடன் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றிற்கு கீழ் வரும் பணியாளர்கள் உடன் தேவை. முன் அனுபவம் விரும்பத்தக்கது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

1) **சமையலாளர்**
(தகுந்த சம்பளம் வழங்கப்படும் வயது எல்லை- 20-55)

2) **சமையல் உதவியாளர்**
(வயது எல்லை- 20-50)

3) **ரூம் (Room) துப்புரவுப் பணியாளர்**
(முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத் ) (வயது எல்லை- 20-50)

4) **வரவேற்பாளர் (Receptionist)**
(தமிழ், ஆங்கிலம், சிங்களம் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.
அடிப்படைக் கணினி அறிவு மற்றும் குறைந்தது 1வருட அனுபவம் அவசியம்.)
(வயது எல்லை- 20-40)

தொடர்புகளுக்கு :- **07725149 4, 0778729806**

**நேரில் சமூகம்தரவேண்டிய முகவரி:-**
**195,கோயில் வீதி, நல்லூர்,**
**யாழ்ப்பாணம். (195,Temple Road, Nallur, Jaffna)**

(cr.43658) (N -1)

## வாடகைத் தாய் தேவை

IVC மூலம் செய்வதற்கு வாடகைத் தாய் தேவை.

தொடர்புகளுக்கு:-

**074 099 7517, 074 018 1972**

(CS/56640) J-1

## பண்ணை வேலைக்கு ஆட்கள் தேவை [ஆண்கள்]

- 19-45 வயதுடையவர்கள்
- ஆடு-மாடு வளர்ப்பில் அனுபவமுள்ளவர்கள்
- தேக ஆரோக்கியமுள்ளவர்கள்.
- பண்ணையில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவர்கள்

**இடம்: கெற்பேலி மத்தி, மிருசுவில்.**

தொடர்புகளுக்கு:

**076 200 1700**

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரதான வங்கிகள் மற்றும் அலுவலகங்களுக்கு ஆண் / பெண் துப்புரவுத் தொழிலாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உள்ளனர். கவர்ச்சிகரமான மாத சம்பளம், வருடாந்த போனஸ், EPF, ETF மற்றும் காப்புறுதி போன்ற சலுகைகள் வழங்கப்படும். தொடர்புகளுக்கு:

**077 742 5053, 077 712 2281, 076 213 4548**

## வேலைவாய்ப்பு

வத்தளையில் இயங்கி வரும் இந்திய சிமெந்து விநியோக நிறுவனம் ஒன்றிற்கு Marketing ஊழியர்கள் தேவை. வயது 25 - 40 (ஆண்கள்) சம்பளம் - 75,000, தங்குமிடவசதி இலவசம், சிங்களமொழி பேசத்தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.

(CS/56638) J-1


தொடர்புகளுக்கு:- **077 760 0444**

## மணமகள் தேவை

கொழும்பில் வசிக்கும் 31 வயதுடைய தமிழ் கத்தோலிக்க கௌரவ குடும்பம் (V) எனது மகனுக்கு (Data entry operator) 5"2" உயரமுள்ளவர். நல்ல குணமுள்ள மணமகள் தேவை.

T.P. **076 397 9253**

## மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 05 . 1968

மறைவு 27 . 10 . 2024

### தியாகராஜா கணேசராஜ்

திருகோணமலையை பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா கணேசராஜ் அவர்கள் யாழ்ப்பாணத்தில் கடந்த 27.10.2024 அன்று சுகவீனம் காரணமாக காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் ராஜலட்சுமி (லண்டன்) தம்பதியரின் அன்பு மகனும், வசந்தநாயகியின் (ஆசிரியர் - மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்) அன்புக் கணவரும், மட்டுவில் மத்தியைச் சேர்ந்த விஸ்வலிங்கம் - நாகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகனும், றாஜினி (லண்டன்), காலஞ்சென்ற சத்தியராஜ் மற்றும் உமாஜினி (லண்டன்), காலஞ்சென்ற பிரதீபராஜ் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ரகுநாதன் (லண்டன்), மகேந்திரன் (லண்டன்), சிவநாயகி (அவுஸ்ரேலியா), காலஞ்சென்ற சாந்தநாயகி மற்றும் தேவநாயகி பிரேம்குமார் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனனும், அன்ஷிகா (லண்டன்), அஷ்விகா (லண்டன்), நிவோஷன் (லண்டன்), மகிஷா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று லண்டனில் (Haslemere Hall, Haslemere Road,Thornton Hearth, CR7 7BE) நடைபெறும்.

**தகவல்:**
**மனைவி - 076 608 2233**

(CS/56642) N-1

## வேலையாள் தேவை

எமது கால்நடை உற்பத்தி விற்பனை நிலையத்திற்கு ஆண், பெண் வேலையாள்கள் தேவை.
ஆண் - (Light Vehicle Licence Auto,motor Cycle Licence உட்பட)
ஓய்வுபெற்றவர்களும் விரும்பத்தக்கது.

**JAFFNA EGG CENTER**
**075 258 9665**

## மணமகள் தேவை

யாழில் தனியார் நிறுவனத்தில் நல்ல பதவியிலுள்ள 1986 ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு (விஸ்வகுலம்) பெற்றோர் நற்குணமுள்ள மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

**077 612 9051**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 84 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

### நிலப்பரப்பு


▲ 20 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
▲ 2 ஆண்டுகள் பூர்த்தியான தென்னங்கன்றுகள் உள்ளன.
▲ 2 பரப்புள்ள துண்டு ஒன்றுக்குள் 6 தொடக்கம் 10 வரையான தென்னங்கன்றுகள் உள்ளன.
▲ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்.
▲ அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

**ஒரு பரப்பின் விலை**

▲ நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
▲ கடற்கரையை (Beach) முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
▲ 20 அடி பாதையை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் **9,75000** ரூபாய் மட்டுமே
▲ தரகர் தேவையில்லை
▲ பார்வையிடும் நேரம் -
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை

**தொடர்பு: ஜெயம்**
**077 814 7389**
**077 986 5457**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.11. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
Registered as a Newspaper
பக்கங்கள்: 08
தேர்தல் சிறப்பிதழ்
மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2055 | ஐப்பசி 24 | ஞாயிற்றுக்கிழமை (10.11.2024) | சிகரம் :227



# மாற்றத்துக்கு மாம்பழம்

## சுயேச்சைக்குழு 14

2 X

"சொந்த மண்ணையும் நொந்து நின்ற மக்களையும் கைவிட்டு தூரதேசம் ஓடியவன் நானில்லை

"ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாஸ டி.பி.விஜயதுங்க சந்திரிகா மஹிந்த என்று வரிசைகட்டிய அத்தனை ஆட்சியாளரையும் தன்னந்தனியாக தமிழர் நலன்காக்க எதிர்த்து நின்றவர்

எட்டுத்திக்கும் வியந்துநின்ற
எம் உரிமைப்போரை
எட்டப்பன்களுடன் இணைந்து
பட்டுப்போக வைத்தவனோ

அல்லது

போர்க்குற்றவிசாரணை
முடிந்துவிட்டதென்று
பொய்யுரைத்தவனோ

அல்லது

சொந்தமண்ணையும்
நொந்து நின்ற மக்களையும்
கைவிட்டு தூரதேசம் ஓடியவனோ

இல்லை நான்!

எனது சொந்த நலன்களுக்கு
அரசிடம் மண்டியிடாமல்
மக்கள் நலன் திட்டங்களைப்
பெற்றுக்கொடுத்தவன்

40 வருடங்களாக
பேனா என்னும் ஆயுதத்தால்
போரை நடத்திக் கொண்டிருப்பவன்

தமிழர்களின்
40 வருடகாலப் போராட்டத்தில்
மிஞ்சியது
தமிழரசுக் கட்சியும்
உதயனுமே!

தற்போது தமிழரசுக் கட்சியோ
துரோகிகளின் கையில்சிக்கி
குள்ளநரிகளால் குதறப்பட்டு
குற்றுயிராய்த் துடிதுடிக்கிறது.

எஞ்சியிருப்பதோ
தமிழர்களின் குரலாக
என்றுமே சோரம் போகாத
உதயன் மட்டுமே!

சதி செய்த கயவர் கூட்டம்
விதிமாற்றப் புறப்பட்ட
சுடரொளிப் பத்திரிகையின்
கதி முடித்து கருவறுத்து
சமாதிகட்டியதைப் போன்று
இப்போது உங்களுக்கு நேரும்
அநீதிகளை வெளிப்படுத்திய
தமிழ்த்தேசியத்தின்
இதயத்துடிப்பான
உதயனையும்
அழியவிடப் போகின்றீர்களா?

தமிழ்த்தேசியத்தையும்
உரிமைக்கான குரலையும்
பாழாகிப் போகிடாமல்
வரலாறொன்றை எழுதிட
பேனாவால் போர் தொடுக்கும்
சரவணபவனே
உங்களின் தெரிவாகட்டும்.

சரவணபவனுக்கு
அரணாக உங்கள் வாக்குகள்

அரசியலுக்கு வந்தபின்னரே
சர்வதேசம் என்ற வார்த்தையை
மாரித்தவளை போல
கத்திதீர்ப்போர் மத்தியில்
சரித்திரம் படைத்தவர்
சரவணபவன்

தேசியத் தலைவர் முதல்
சர்வதேசத் தலைவர்கள் வரை
நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக
வாண்மையோடு எல்லோருடனும்
நெருக்கமான தொடர்பைப்
பேணி விழுது பரப்பியவர்

பிரிட்டன் பிரதமர்
அமெரிக்கத் தூதர்கள்
இராஜதந்திரிகள்
ஐ.நா.பிரதிநிதிகள்
கண்காணிப்பாளர்கள்
சமாதானத் தூதர்கள்
என்று அவரது வாசல் தேடி
வந்தவர்கள் ஏராளம்

ஜே.ஆர் ஜெயவர்த்தன,
பிரேமதாஸ
டி.பி.விஜயதுங்க
சந்திரிகா
மஹிந்த
என்று வரிசைகட்டிய
அத்தனை ஆட்சியாளரையும்
தன்னந்தனியாக
தமிழர் நலன்காக்க
எதிர்த்து நின்றவர்

தடம்மாறாமல் நின்று
தமிழ்த்தேசியம் காத்ததாலே
தேசியத்தலைவரின்
அன்பையும் வென்றவர்

சரவணபவனுக்கு
வாக்களித்தால்
சர்வதேசத் தொடர்புகள்
இன்னும் வலுப்பெறும்
தமிழர் தாயகம்
இன்னும் வளம்பெறும்




"தேசியத் தலைவர் முதல் சர்வதேசத் தலைவர்கள் வரை நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக வாண்மையோடு எல்லோருடனும் நெருக்கமான தொடர்பைப் பேணி விழுது பரப்பியவர்


"தமிழர்களின் 40 வருடங்களாக பேனா என்னும் ஆயுதத்தால் போரை நடத்திக் கொண்டிருப்பவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
10 நவம்பர் 2024

நிலாந்தன்

# தேசியம் என்றால் என்ன என்று கேட்கும் ஒரு தேர்தல் களம்?



பி.பி.சி. தமிழ்ச்சேவை கடந்த 7 ஆம் திகதி ஒரு கட்டுரையைப் பிரசுரித்திருந்தது. அந்தக்கட்டுரை வன்னித் தேர்தல் தொகுதியில் உள்ள அரசியல்வாதிகளையும் பொது மக்களையும் நேர்கண்டு எழுதப்பட்டுள்ளது. அதில் தேசியம்,சமஷ்டி, 13 ஆவது திருத்தம் போன்ற வார்த்தைகளின் அர்த்தம் அநேகமானவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.அதில் நேர்காணப்பட்ட அரசியல் வாதிகளுக்கும் அதுதொடர்பாக முழுமையான விளக்கம் இருக்கவில்லை. அதுபோலவே சுமந்திரனின் பிரசாரக் காணொலி ஒன்றில் அவர் தேசியம் என்றால் என்ன என்று கேட்கிறார். அந்த வார்த்தையைப் பயன்படுத்தும் பலருக்கு அதன் அர்த்தம் தெரியாது என்ற பொருள்பட கருத்துரைக்கிறார்.மேலும் அவருடைய பிரசார காணொலிகளில் அவர் "அறிவார்த்த தமிழ்த் தேசியத்தின் குரல்" என்று அழைக்கப்படுகிறார். அறிவார்ந்த தமிழ்த் தேசியம் என்றால் என்ன?

அதுபோலவே மான் சின்னத்தின் கீழ் போட்டியிடும் மணிவண்ணன் "நவீன தமிழ்த் தேசியம்" என்ற ஒரு வார்த்தையைப் பயன்படுத்துகிறார். நவீன தமிழ்த் தேசியம் என்றால் என்ன?

சுமந்திரன் அந்தக் காணொலியில் கேட்பதுபோல,பி.பி.சி. தமிழில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரையில் கூறப்பட்டிருப்பது போல,தேசியம் என்றால் என்ன என்ற கேள்விக்கு வாக்காளப் பெருமக்களுக்கு மட்டுமல்ல பல வேட்பாளர்களுக்கே பதில் தெரியாது. ஓர் ஆயுதப் போராட்டத்தை நடத்தி ஒரு கருநிலை அரசை நிர்வகித்து அது தோற்கடிக்கப்பட்ட கடந்த 15 ஆண்டுகளின் பின்னரும் தேசியம் என்றால் என்ன என்று கேட்கும் ஒரு நிலைமைதான் காணப்படுகின்றதா? தமிழ் அரசியல்வாதிகள் எத்தனை பேர் இந்தக் கேள்விக்கு பொருத்தமான விடையைக் கூறுவார்கள்? அவர்களுக்கு பொருத்தமான விடை தெரிந்திருந்தால் தமிழரசியல் இப்போதுள்ள சீரழிவான நிலைக்கு வந்திருக்காது.

எனவே முதலில் நாங்கள் ஒரு தெளிவுக்கு வருவோம்.தேசம், தேசியம் என்றால் என்ன என்பதனை சுருக்கமாகப் பார்க்கலாம். தேசம் என்பது ஒரு பெரிய மக்கள் திரள்.ஒரு மக்கள் கூட்டத்தை பின்வரும் அம்சங்கள் தேசமாக வனைகின்றன. முதலாவது பாரம்பரிய தாயகம் அல்லது நிலம். இரண்டாவது இனம் அல்லது சனம். மூன்றாவது பொதுவான மொழி.நாலாவது பொதுவான பண்பாடு. ஐந்தாவது பொதுவான பொருளாதாரம். இந்த ஐந்தையும் விட ஆறாவதாக ஒரு விடயமும் உண்டு. அதுதான் அடக்குமுறை. ஒரு மக்கள் கூட்டத்தின் தேசிய அடையாளங்களை அழிக்கும் நோக்கத்தோடு கட்டமைக்கப்படும் இன அழிப்பு நடவடிக்கைகளும் ஒரு மக்கள் கூட்டத்தை தற்காப்பு உணர்வோடு தேசமாகத் திரட்டுகின்றன.

எனவே இப்பொழுது தெளிவான ஒரு முடிவுக்கு வரலாம். தேசியவாத அரசியல் என்பது அல்லது தேசியம் என்பது ஒரு மக்கள் கூட்டத்தை தேசமாக வனையும் அம்சங்களைப் பாதுகாப்பதும் பலப்படுத்துவதுந்தான்.அதாவது அதை அதன் பிரயோக அர்த்தத்தில் கூறின், ஒரு மக்கள் கூட்டத்தை உருகிப் பிணைந்த பெருந் திரளாகத் திரட்டுவது.

ஆனால் கடந்த 15 ஆண்டுகளாக எந்த ஒரு கட்சியாவது மக்களைத் தேசமாகத் திரட்டுவதில் வெற்றி பெற்றிருக்கிறதா? இல்லை.இதற்கு முதற்பொறுப்பு தமிழரசுக் கட்சிதான். ஏனெனில் உள்ளதில் பெரிய கட்சி அது. வடக்கு- கிழக்காக ஒப்பீட்டளவில் பரந்த கட்டமைப்பைக் கொண்டிருக்கும் கட்சி. கடந்த15 ஆண்டுகளாக தமிழ் மிதவாத அரசியலின் பிரதான தீர்மானிக்கும் சக்தியாக இருந்த கட்சி. எனவே கடந்த 15 ஆண்டு காலத்தில் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டத் தவறியதற்கு அந்தக்கட்சி தான் முதல் பொறுப்பு.தமிழ்த் தேசிய வரலாற்றில் உருவாகிய,பெரிய கூட்டாகிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சிதைவதற்கு காரணம்,தமிழரசுக் கட்சிதான்.கூட்டமைப்பிலிருந்து பங்காளிகளை படிப்படியாக அகற்றும் ஒரு போக்கின் விளைவாக இப்பொழுது தமிழரசுக் கட்சி தானும் இரண்டாகி, பலவாகி நிற்கிறது.

அடுத்தது,தமிழ்த் தேசிய முன்னணி. தேசியவாத அரசியல் என்பதனை தூய்மை வாதமாக சித்திரித்து,தனது அரசியல் எதிரிகளை துரோகிகள்,காட்டிக் கொடுப்பவர்கள்,இந்தியாவின் ஏஜென்ட்கள் என்று முத்திரை குத்துவதன்மூலம் அந்தக் கட்சி கடந்த 15 ஆண்டுகளாக தேசத்தை திரட்டத் தவறிவிட்டது. சிறிய கவனஈர்ப்பு போராட்டங்களை நடத்துவதுபொலிஸாரோடு,புலனாய்வுத் துறையோடு மோதுவது;விடுதலைப்புலிகள் இயக்கத்தின் நினைவு நாட்களைத் தத்தெடுப்பது;போன்றவற்றின்மூலம் அக்கட்சி தன்னை ஆயுதப் போராட்டத்தின் ஏகபோக வாரிசாகக் கட்டமைக்கப் பார்க்கின்றது.

தன்னை ஆயுதப் போராட்டத்தின் ஏகபோக வாரிசாகக் காட்டிக் கொள்வதே அடிப்படைத் தவறு.ஆயுதப் போராட்டம் வேறு,மிதவாத அரசியல் வேறு.இரண்டாவது தவறு,தங்களைப் புனிதர்களாக காட்டுவதற்காக தமது அரசியல் எதிரிகளை சாத்தான்களாக துரோகிகளாக சித்தரிப்பது. மற்றவர்களை துரோகிகள் என்று முத்திரை குத்துவதன் மூலம் யாரும் தங்களை தியாகிகள் ஆக்கிவிட முடியாது. மாறாக, முன்னுதாரணம் மிக்க தியாகங்களைச் செய்வதன் மூலம் தான் யாரும் தங்களைத் தியாகிகள் ஆக்கலாம்.

அரசியல் களத்தை தியாகி எதிர் துரோகி என்று பிரிப்பது தேசத்தைத் திரட்டுவதற்கு உதவாது.தேசம் என்பது ஒரு சமூகத்தின் பலம்,பலவீனம் எல்லாவற்றினதும் திரட்சி தான்.நல்லவர்கள் கெட்டவர்கள் எல்லாருடையதும் திரட்சி தான்.முன்னணியின் கடந்த 15 ஆண்டுகால அரசியல் என்பது தேசத்தைத் திரட்டுவது அல்ல.தேசத்தை சிதறடிப்பதுதான்.அதன் விளைவாக கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது அக்கட்சிக்குள்ளே உடைவு ஏற்பட்டது.தமிழரசுக் கட்சியைப் போலவே அவர்களும் தோல்விகளில் இருந்து எதையுமே கற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. தமிழரசுக் கட்சிக்கு எதிராக ஒரு மாற்றாக எழுவது என்பது தேசத்தைச் சிதறடிக்கும் அரசியலுக்கு எதிராக தேசத்தைத் திரட்டும் அரசியல்தான்.

அடுத்தது குத்து விளக்குக் கூட்டணி. இப்பொழுது அது சங்கு கூட்டணி. தொடக்கத்திலிருந்து தன் சொந்தப் பலத்தை நம்பாத ஒரு கூட்டு அது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் ஜனநாயகம் என்ற ஒரு சொல்லை முன்னொட்டுவதன் மூலம் தம்மை மெய்யான கூட்டமைப்பாக காட்ட அவர்கள் முயன்றார்கள்.கட்சிப் பெயருக்குத்தான் வாக்கு விழும் என்று அவர்கள் நம்புகிறார்கள். அதுபோலவே ஜனாதிபதித் தேர்தலில் கட்டி எழுப்பப்பட்ட சங்குச் சின்னத்தைக் கைப்பற்றியதன்மூலம் பொது வேட்பாளருக்கு கிடைத்த வெற்றிகளை தங்களுக்கு மடைமாற்றலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள். அதாவது ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட பெயர், இடையில் ஸ்தாபிக்கப்பட்ட சின்னம் என்பவற்றை தம் வசப்படுத்துவதன் மூலம் வாக்குகளைக் கவரலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள். இது ஒரு தேர்தல் உத்தி மட்டுமே. எல்லாத் தேர்தல் உத்திகளும் தேசத்தை திரட்டுவன அல்ல.

எனினும்,கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தேசத்தைத் திரட்டும் கோஷத்தின் கீழ் இந்தக் கூட்டு, பொதுக் கட்டமைப்புக்குள் ஓர் அங்கமாக இருந்தது. பொது வேட்பாளரை முன்நிறுத்தி ஒரு பொதுக் கோரிக்கையாகிய தேசத்தை திரட்டும் கோரிக்கைக்காக உழைத்த கட்சிகள் இந்தக் கூட்டுக்குள் உண்டு. ஆனால் அந்த உழைப்பின் விளைவாக ஸ்தாபிக்கப்பட்ட சங்குச் சின்னத்தை கைப்பற்றும் விடயத்தில் அவர்கள் தேசத் திரட்சியா? அல்லது கட்சி அரசியலா? அல்லது தேர்தல் வெற்றியா? என்று முடிவெடுக்க வேண்டி வந்த பொழுது. இக்கூட்டானது கட்சி அரசியல் சார்ந்த தேர்தல் வெற்றிக்கு முன்னுரிமை வழங்கியது. எனவே தேசத் திரட்சிக்கு அவர்கள் விசுவாசமாக இருக்கிறார்களா இல்லையா என்பதனை அவர்கள் மீண்டும் எதிர்காலத்தில் நிரூபிக்க வேண்டியிருக்கும்.


அடுத்தது மான் கட்சி. இக்கட்சியும் பொது வேட்பாளரை முன் நிறுத்திய பொதுக் கட்டமைப்பில் ஒரு அங்கமாக இருந்தது.விக்னேஸ்வரன் அரசியலில் இருந்து அனேகமாக ஒதுங்கிவிட்டார்.கட்சியின் முதன்மை வேட்பாளராகக் காணப்படும் மணிவண்ணன் தன்னுடைய தாய்க் கட்சியாகிய தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியிடமிருந்து எங்கே துலக்கமான விதங்களில் வேறுபடுகிறார் என்பதனை இனி நிரூபிக்க வேண்டியிருக்கும்.

மற்றவை சுயேச்சைகள். இம்முறை தேர்தலில் அதிகம் சுயேச்சைகள் தோன்றக் காரணமே பிரதான கட்சிகளின் தோல்விதான்.பிரதான கட்சிகளில் இருந்து வெளிவந்த ஒரு பகுதியினர் சுயேச்சையாக நிற்கிறார்கள்.பிரதான கட்சிகளால் உள்வாங்கப்படாதவர்களும் சுயேச்சையாக நிற்கின்றார்கள்.தலைமைத்துவ வெற்றிடம் காரணமாக யாராவது தங்களை வந்து மீட்க மாட்டார்களா என்று காத்திருக்கும் தமிழ் கூட்டு உளவியல் காரணமாக திடீரென்று பிரபல்யம் ஆகிய மருத்துவர் அர்ச்சுனாவை போன்றவர்களும் சுயேச்சையாக நிற்கிறார்கள்.யார் எதற்காக நின்றாலும் சுயேச்சைகள் அதிகரிப்பதற்கு காரணம் பிரதான தமிழ்த் தேசியக் கட்சிகள் தேசத்தைத் திரட்டத் தவறியமைதான்.எனவே இம்முறை தேர்தல் களம் தமிழ் மக்களுக்கு உணர்த்துவது எதை என்று சொன்னால், தமிழ்த் தேசியம் பேசும் எல்லாக் கட்சிகளுமே தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் விடயத்தில் தோல்வி அடைந்துவிட்டன என்பதைத்தான்.

இந்த அடிப்படையில் பார்த்தால்,கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்ப் பொதுவேட்பாளர் பெற்ற வெற்றி அரிதானது. அது ஒரு மிகப்பெரிய வெற்றி இல்லைத்தான்.ஆனாலும் அடிப்படை வெற்றி.அந்த முயற்சியில் ஈடுபட்ட கருத்துருவாக்கிகளை "பத்தி எழுத்தாளர்கள்" என்று சிறுமைப்படுத்தியது ஒரு பகுதி. தமிழில் பத்தி எழுத்தாளர் என்ற வார்த்தை அதிகம் அவமதிக்கப்பட்ட ஒரு காலகட்டம் அது. அதாவது தேசத்தைத் திரட்ட முற்பட்ட குற்றத்துக்காக அதில் முன்னணியில் நின்றவர்களை சிறுமைப்படுத்த அந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டது.

சுமந்திரன் பொதுவேட்பாளரை ஒரு கேலிக்கூத்து என்று சொன்னார். கஜேந்திரன் இந்த முயற்சியில் நீங்கள் வென்றால் நாங்கள் இப்பொழுது வைத்திருக்கும் இரண்டு ஆசனங்களையும் இழந்து விடுவோம் என்பது எங்களுக்குத் தெரியும் என்று சொன்னார்.முடியுமென்றால் ஒரு பொது வேட்பாளரை நிறுத்திக் காட்டுங்கள் என்று ரணில் சவால் விட்டார். பொதுவேட்பாளர் முழுத்தீவுக்கும் பொதுவான நாசமாக முடியும் என்று சஜித் எச்சரித்தார். அது ஆண்டிகள் கூடிக் கட்டும் மடம் என்றும் ஆபத்தான விஷப்பரீட்சை என்றும் எழுதினார்கள்.

அதாவது,தென்னிலங்கையில் உள்ள கட்சிகளும் பொதுவேட்பாளரை ஆபத்தாகப் பார்த்தன.தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட பிரதான கட்சிகள் இரண்டு அதனை விரோதமாகப் பார்த்தன.தேசத் திரட்சிக்கு எதிரான ஊடகவியலாளர் சிலர் தெரிந்தோ தெரியாமலோ தமது சொந்த மக்களைத் தோற்கடிப்பதற்காக உழைத்தார்கள்.ஆனாலும் பொது வேட்பாளர் அடிப்படை வெற்றியைப் பெற்றார். இலங்கையின் தேர்தல் வரலாற்றில் ஒரு தமிழ் அரசியல்வாதி பெற்ற ஆகப்பெரிய வாக்குகளை அவர் பெற்றார். கிழக்கில் இருந்து வந்த ஒரு வேட்பாளருக்கு வடக்கில் மட்டும் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் கிடைத்தன.கடந்த 15 ஆண்டுகளிலும் கட்சிகளைக் கடந்து தேசத்தைத் திரட்டுவதற்கு எடுக்கப்பட்ட ஒரு முயற்சிக்குக் கிடைத்த அடிப்படை வெற்றி அது. மக்கள் அமைப்புகளும் கட்சிகளும் இணைந்தால் அவ்வாறு வாக்குகளைத் திரட்ட முடியும் என்பது ஜனாதிபதித் தேர்தலில் நிரூபிக்கப்பட்ட ஒரு உண்மை. கட்சிகளின் போதாமை காரணமாகத்தான் மக்கள் அமைப்பொன்று கட்சிகளோடு ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டி வந்தது. எனவே கட்சிகள் மட்டும் தேசத்தைத் திரட்ட முடியாது என்பது கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நிரூபிக்கப்பட்ட ஒரு உண்மை. இப்பொழுது,மீண்டும் கட்சிகள் தேசத்தைத் திரட்டுவதில் எவ்வளவு தூரம் தோல்வியடைந்துள்ளன என்பதனை நிரூபிக்கும் ஆகப்பிந்திய உதாரணமாக நாடாளுமன்றத் தேர்தல் களம் காணப்படுகிறது.அதாவது தேசியம் என்றால் என்ன? தேசியவாத அரசியல் என்றால் என்ன? என்பதை ஆழமாக விளங்கிக் கொள்ளத் தவறிய கட்சிகளும் அரசியல்வாதிகளும் தமிழ் மக்களை மீண்டும் சிதறடிக்கும் ஒரு தேர்தல் களம் இது. எனினும்,தமிழ்த் தேசிய அரங்கில் ஒரு கட்சி ஏகபோகத்தை மேலும் உடைத்துக்கொண்டு பல தரப்புகள் மேலெழுமாக இருந்தால் அதுவும் ஒருவிதத்தில் நன்மைக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலுகைகளுக்காக மண்டியிடும் அரசியல்தலைமைகள் திருந்தவேண்டும்



## கடந்த தேர்தலை விடவும் இம்முறை அமோக வெற்றி நிச்சயம்

## நம்பிக்கையுடன் சொல்கிறார் சுகாஷ்

○ நேர்கண்டவர் : ஆர்.பிரகாஷ்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளரும், நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளரும்,சட்டத்தரணியுமான சுகாஷ் உதயன்– சஞ்சீவி வாசகர்களுக்காக வழங்கிய நேர்காணல் இது.

**கே: கடந்ததேர்தலில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி இரண்டு ஆசனங்களைக்கைப்பற்றியிருந்தது. இந்தநிலையில் இம்முறை எத்தனை ஆசனங்களைக் கைப்பற்றுவீர்களென நினைக்கிறீர்கள்?**

**ப:** வடக்கு - கிழக்கில் குறைந்தது பத்து ஆசனங்களையாவது கைப்பற்ற வேண்டும் என்ற நோக்குடன் நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம். தமிழ்த்தேசியத்தினுடைய தலைமைச் சக்தியாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை மாற்றமுடியும். அப்போது தான் தமிழினம் மக்கள் சார்ந்து பேரம்பேசி தமிழின அபிலாசைகளையும், விடுதலைகளையும் வென்றெடுக்கமுடியும். யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் அதிகூடிய ஆசனங்களையும், அதிகூடிய வாக்குகளையும்பெறும் கட்சியாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியே நிச்சயமாக இருக்கும். ஏனைய மாவட்டங்களில் வாக்கு வங்கிகளும் ஆசனங்களும் நிச்சயமாக அதிகரித்தே இருக்கின்றது. இம்முறை நடைபெறவிருக்கின்ற தேர்தல் தமிழ்த்தேசத்தினுடைய அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்துவதாக அமையும்.

**கே: கடந்த தேர்தலில் உங்களோடு பயணித்த சிலர் இப்போது விலகி வேறு கட்சிகளில் களம் காண்கின்றனர். அவர்கள் மூலமும் கட்சிக்கு குறிப்பிடத்தக்க வாக்குகள் கிடைத்திருந்தன. அவர்கள் வேறு கட்சியில் இருப்பதால் உங்கள் வாக்குகளில் பாதிப்பு உண்டா?**

**ப:** எந்தவிதமான பாதிப்புகளும் இல்லை உண்மையில் கொள்கைகளுக்கு விரோதமானதும், ஒழுக்கத்துக்கு விரோதமான செயற்பாடுகளில் ஈடுபடுவர்கள் கட்சியில் இருந்து நீக்கப்பட்டதன் காரணத்தால் கட்சி மீதான நம்பிக்கை மக்களுக்கு அதிகரித்திருக்கின்றது. இம்முறை வட கிழக்கில் இன்னமும் வாக்கு வங்கிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றன. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தமிழ்த் தேசியத்தின் தலைமைச் சக்தியாக நிச்சயம் மாறும்.

**கே: நாடெங்கும் மாற்றத்துக்கான அலை வீசுவதாகச் சொல்லப்படுகின்றது. இந்த மாற்றத்துக்கான அலையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எவ்வாறு கையாளப்போகின்றது?**

**ப:** நிச்சயமாக இம்முறை வடக்கு - கிழக்கில் பெரும் அரசியல் மாற்றங்கள் ஏற்படப்போகின்றன. மக்களுக்கு இன்று யார் சரியான தரப்பு இனத்துக்காக உழைப்பவர்கள் யார். இனத்துக்காக போராடுபவர்கள் யார் என்ற தெளிவான சிந்தனை மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான எமது கட்சி தமிழ்த் தேசியத்தின் தலைமைச் சக்தியாக அதிகமான வாக்குகளோடு தெரிவு செய்யப்பட இருக்கின்றது. அந்த மாற்றத்தை தமிழ் மக்களும், உலக மக்களும் விரைவில் காண்பார்கள். அது இன்று பாதை மாறிச் சென்று கொண்டிருக்கின்ற தமிழ்த்தேசிய அரசியலை சரியான தடத்துக்கு மாற்றுவதாக அமையும்.

**கே: அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வருவது தமிழர்களுக்கு சாதகமா? பாதகமா? உங்கள் கருத்தென்ன?**

**ப:** எங்களைப் பொறுத்தவரையில் சிங்கள தேசத்திலே நடைபெறுகின்ற மாற்றங்கள் வெறும் ஆள்மாற்றம், முகம் மாற்றமாகவே இருக்கின்றனவே தவிர கொள்கை மாற்றமாகக் காணப்படவில்லை. அது அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் பொருந்துவதாக அமையும்.

அநுரகுமார திஸாநாயக்க வின் போக்கைப் பார்க்கும்போது இவர் இதுவரை இருந்த ஆட்சியாளர்களை விட மிக மோசமான இனவாதியாக இருப்பார் என்பதை எங்களால் உணர முடிகின்றது. அதற்கு ஒரு மிகச் சிறந்த உதாரணமாக தமிழர்கள் மாகாணசபையை தமக்கான ஒரு தீர்வாகவோ அல்லது தீர்வினுடைய ஆரம்பப் புள்ளியாகவோ இருக்க முடியாது எனக் கூறி நிராகரிக்கின்றனர்.

ஆனால் இந்த மாகாண சபையை வழங்குவதற்கு தமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என மஹிந்த ராஜபக்ச, சஜித் பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்க, நாமல் ராஜபக்ச ஏனைய கடும் போக்கான இனவாதிகள் பல தடவைகள் கூறியிருக்கின்றார்கள். இவ்வாறான சிங்கள - பௌத்த கடும் போக்கு சிந்தனைவாதிகள் அதனை வழங்கத் தயாராகவிருந்தபோதும் மாகாணசபை முறைமையைக் கூட தமிழர்களுக்கு வழங்கக் கூடாது, மாகாணசபை முறையை ஒழிக்க வேண்டும் என ஜே.வி.பி.யும், அநுரகுமார திஸாநாயக்க கூறுவதிலிருந்து அவர்கள் எவ்வாறான இனவாதிகள் என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

**கே: அநுரகுமார அரசாங்கத்தில் தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த சிலர் அமைச்சுப்பதவிகளைப் பெறுவதற்காக இப்போதே பின்கதவால் சென்று முன்பதிவு செய்துவிட்டதாகச் சொல்லப்படுகின்றதே. அது பற்றி?**

**ப:** கிளிநொச்சி மாவட்டத்திலே முக்கியமான அரசியல்வாதி ஒருவருக்கு ஆறு மதுபானசாலைகளுடன் தொடர்புகள் இருப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. பின்னர் அந்த அரசியல்வாதி தனியே அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித்த பின்னர் இருந்து அவ் விடயம் அப்படியே கிடப்பில் போடப்பட்டது. பின்னர் அது தொடர்பான தகவல்கள் வெளியாகவில்லை. அதேபோல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சுமந்திரன் போன்றோரும் அமைச்சுப் பதவிகளை எடுப்பது போன்ற தகவல்களை கசிய விட்டிருந்தார்கள். ஆனால் ஜே.வி.பி.யும், அநுரகுமார திஸாநாயக்கவும் அதன் முக்கியமான தலைவர்களும் அதனை மறுத்து தங்களது சின்னத்தில், தமது கட்சியில் போட்டியிடுபவர்களுக்குத் தான் அமைச்சுப் பதவியை வழங்கமுடியுமென கூறியிருக்கிறார்கள். கொள்கைகளற்று அற்பமான பதவிகளுக்காக சிங்கள - பௌத்த பேரினவாதத்தினரிடம் தமிழ் மக்களினுடைய அபிலாசைகளையும், நலன்களையும் அடகு வைத்து மாவீரர்களுக்கும், தமிழ்த் தேசியத்துக்காக உயிர் நீத்த தமிழ் மக்களுக்கும் துரோகம் இழைத்துக் கொண்டிருக்கின்ற தமிழ் அரசியல்வாதிகளுக்கு இது ஒரு செருப்படியாக அமைந்துள்ளது. அதாவது சில தமிழ் அரசியல்வாதிகள் அநுர தரப்போடு 'டீல்' வைப்பதற்குப் போய் அது அநுர தரப்பினரால் நிராகரிக்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இனியாவது சிங்களவர்களின் சலுகைகளுக்கும், பதவிகளுக்கும் மதுபான அனுமதிப்பத்திரங்களுக்கும் சோரம் போகின்ற தமிழ்த் தலைமைகள் திருந்த வேண்டும்.



எங்களைப் பொறுத்தவரையில் சிங்கள தேசத்திலே நடைபெறுகின்ற மாற்றங்கள் வெறும் ஆள்மாற்றம், முகம் மாற்றமாகவே இருக்கின்றனவே தவிர கொள்கை மாற்றமாக காணப்படவில்லை. அது அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் பொருந்துவதாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
10 நவம்பர் 2024

# நாமே தமிழ்த் தேசியத்துக்காக நேர்மையாக நடக்கின்றோம்



யாழ்.மாநகரசபையின் முன்னாள் முதல்வரும், தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ்-கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தின் முதன்மை வேட்பாளரும் சட்டத்தரணியுமான மணிவண்ணன் உதயன்- சஞ்சீவிக்காக வழங்கிய நேர்காணல் இது.

## மணிவண்ணன் நம்பிக்கை

நேர்கண்டவர் : ஜெ.சுலக்சன்

**கே: கடந்தமுறை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் களமிறங்கிய நீங்கள் இப்போது தமிழ் மக்கள் கூட்டணி என்ற புதிய கட்சியில் இம்முறை தேர்தலைச் சந்திக்கின்றீர்கள். இந்தநிலையில் உங்கள் வெற்றிவாய்ப்புக் குறித்து ....?**

ப: இந்தமுறை தேர்தலில் நாங்கள் மான் சின்னத்தில் போட்டியிடுகின்றோம். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட போது கட்சிக்குள்ளே பல நெருக்கடிகளை சந்தித்தோம். கட்சியினுடைய பல வேட்பாளர்கள் எங்களைப் பிரசாரம் செய்ய முடியாதவாறு நிலைமைகளை ஏற்படுத்தி எம்மை தோற்கடிக்கச் செய்திருந்தனர். தற்போது நான் தமிழ் மக்கள் கூட்டணியின் முதன்மை வேட்பாளராக போட்டியிடுகின்றேன். தற்போது நடைபெறவுள்ள தேர்தலில் கட்டாயம் 3 ஆசனங்களைப் பெறுவோம் என்ற நம்பிக்கை உள்ளது.

**கே: யாழ். மாநகரசபையில் முதல்வராகக் குறுகியகாலமே பதவியில் இருந்த போதும் குறிப்பிடத்தக்களவிலான அபிவிருத்தித் திட்டங்கள், மக்கள் நலன் சார் பணிகளில் ஈடுபட்டிருந்தீர்கள். அந்த மக்கள் நன்மதிப்பு உங்களுக்கு கைகொடுக்குமா? அல்லது வேறு பிரசார உத்திகளை கைக்கொள்கிறீர்களா?**

ப: முன்னர் நாம் யாழ். மாநகரசபை முதல்வராக இருந்த போது பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைச் செய்து மக்களின் மனதில் இடம்பிடித்திருக்கிறோம் என்ற நம்பிக்கை உள்ளது. நாம் இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவது உறுதியாகத் தெரிகிறது. நாங்கள் பருத்தித்துறை, கிளிநொச்சி வரையான இடங்களுக்குச் சென்று பிரசாரங்களை செய்த போது அங்கிருந்த மக்கள் நீங்கள் மாநகரசபையில் இருந்த போது செய்த சேவைகள் எமக்குத் தெரியுமெனவும், நாங்கள் அதனால் உங்களுக்குத்தான் வாக்குப் போடுவோம் எனவும் கூறியிருக்கிறார்கள்.

**கே: உங்கள் தரப்பில் உங்களையும், இன்னும் ஓரிருவரையும் தவிர மற்ற அனைவருமே தேர்தல் களத்துக்கும், மக்களுக்கும் பெரிதாக அறிமுகமில்லாதவர்கள் என்ற கருத்து பொதுவாக உள்ளது. இந்த நிலையில் எந்த நம்பிக்கையின் அடிப்படையில் இந்தத் தேர்தலில் குதித்துள்ளீர்கள்?**

ப: தற்போது எமது கட்சியில் போட்டியிடுகின்ற அனைத்து வேட்பாளர்களுமே மக்கள் மத்தியில் பிரபல்யமானவர்கள், மக்களுக்கு சேவையாற்றியவர்கள், இளைஞர்களோடு அறிமுகமானவர்கள் தான். இதனால் எம் கட்சி வேட்பாளர்களே என்னைத் தோற்கடித்து அதிக விருப்பு வாக்குகளைக் பெறக் கூடிய நிலையில் காணப்படுகின்றனர். இதனால் எமது கட்சி வெற்றிபெறுவது உறுதி.

**கே: நாடெங்கும் மாற்றத்துக்கான அலை வீசுவதாகச் சொல்லப்படுகின்றது. இந்த மாற்றத்துக்கான அலை உங்களைப் போன்ற மாற்றத்தை விரும்புகின்றவர்களுக்குச் சாதகமாக அமையுமா?**

ப: முன்னர் நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் வகித்தவர்கள் மீண்டும் தெரிவாகக் கூடாது என்ற நிலைப்பாடு பருத்தித்துறை தொடக்கம் தெய்வேந்திரமுனை வரை ஒலிக்கின்றது. இம்முறை நாடாளுமன்றத்தில் புதியவர்களே அங்கத்துவம் வகிப்பார்கள் இதற்கான இடைவெளி எம் கட்சியில் மாத்திரமே காணப்படுகின்றது. இதனால் எங்களுடைய கட்சி பெருவாரியான வாக்குகளைப் பெற்று அதிக ஆசனங்களைக் கைப்பற்றும்.

**கே: உங்கள் கட்சியின் ஆதரவாளர்கள் மீது அண்மையில் நீர்வேலியில் ஒரு கும்பல் தாக்குதல் நடத்தியிருந்தது. அது குறித்து பல சர்ச்சைகளும் எழுந்திருந்தன. அந்தத் தாக்குதலை நடத்தியது பிறகட்சிகளா? அல்லது வேறுநபர்களா? ஏன் அது நடத்தப்பட்டது?**

ப: எமது கட்சி மீது நடத்தப்பட்ட தாக்குதல் மிகக் கொடூரமானது. பெண்கள் என்றும் பாராமல் 30 பேர் அடங்கிய குழு பரப்புரைக்காக சென்றவர்கள் மீது கடும் தாக்குதல்களை நடத்தியிருந்தது. இந்தத்தாக்குதலுக்கு பல்வேறு உயர்மட்ட தொடர்புகள் இருப்பது தெளிவாகின்றது. ஏனென்றால் எங்கள் முறைப்பாடுகளை பொலிஸார் ஏற்றுக் கொள்வதில் அக்கறை காட்டவில்லை. இப்பிரச்சினையை சமரசமாகத் தீர்க்குமாறு முன்னாள் ஆயுதக் குழுவாக இயங்கிய தற்போது தேர்தல் களத்தில் போட்டியிடுகின்ற கட்சியோடு தொடர்புடையவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இருப்பினும் நாங்கள் இந்தப்பிரச்சினையை நீதிமன்றத்துக்கு கொண்டு சென்றோம். இத்தேர்தலில் நாம் வெற்றி பெறுவதை தடுப்பதற்காகவே இவ் வன்முறைச் செயற்பாடு இடம்பெற்றுள்ளது, இது ஓர் அரசியல் ரீதியான பழிவாங்கல் என்பது தெளிவாகின்றது.

**கே: முன்னைய காலங்களில் தமிழ்த் தேசியம் சார்ந்து இரு கட்சிகளே களமிறங்குவதுண்டு. ஆனால் இம்முறை பெரும்பாலான கட்சிகளும், சுயேச்சைகளும் கூட தமிழ்த்தேசியத்துக்காகவே போட்டியிடுவதாகச் சொல்கின்றன. இது உண்மையாகவே தமிழ்த்தேசியப் பாதையில் பயணிக்கும் உங்களைப் போன்றவர்களுக்கு பாதிப்பில்லையா?**

ப: இத்தேர்தலில் பல்வேறு கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட்டாலும் போட்டி என்பது மிகச் சொற்பமான கட்சிகளுக்கிடையிலானதாகவே காணப்படுகின்றது. சுயேச்சைக் குழுக்களை மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை இதனால் சுயேச்சைக் குழுக்கள் மக்களால் வெளியேற்றப்படும். மற்றைய கட்சிகளிலும் பல கட்சிகள் 5வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறமுடியாதவை. அதனால் போட்டி என்பது 6,7 தரப்புகளுக்கு இடையானதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக காணப்படுகின்றது. ஆனாலும் இந்தச் சுயேச்சைக் குழுவினர் வாக்குகளைப் பிரித்துச் செல்கின்றனர். இவ்வாறு செய்வதால் எங்களுக்குப் போட்டி குறைவாகவே காணப்படுகின்றது. இதனால் கட்சிகள் குறைவான வாக்குகளைப் பெற்றாலே நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகின்ற நிலை காணப்படுகின்றது.

உண்மையில் தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்ற ஒரேயொரு கட்சி தமிழ் மக்கள் கூட்டணி மட்டும் தான். மற்றைய எல்லாக் கட்சிகளும் வாக்குக்காகவே தமிழ்த் தேசியம் பேசுகின்ற போலித் தமிழ்த் தேசியவாதிகள். தென்னிலங்கையில் ஒவ்வொரு கட்சியினுடைய தலைவர்களுக்கும் தென்னிலங்கைக் கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையிலே இரகசியத் தொடர்பை வைத்துக் கொண்டே தமிழ்த் தேசியம் பேசுகின்றார்கள். நாங்களே தமிழ்த்தேசியத்துக்காக குரல்கொடுக்கும் நேர்மையான தரப்பு.



**மூன்று ஆசனங்களை மான் சின்னத்தில் பெறுவோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்கண்டவர் : த.மயூரன்



# நம் இலக்கு ஆசனங்களல்ல; தமிழ்த் தேசிய இருப்பே!

## காண்டீபன் ஆணித்தரம்

சட்டவாளரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளருமான ந.காண்டீபனின் செவ்வி இது

**கே: கிட்டத்தட்ட ஒரு தசாப்தத்துக்கும் மேலாகப் போராடியும் 2020 ஆம் ஆண்டுவரை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கு நாடாளுமன்றத் தேர்தல்களில் ஆசனங்கள் எவைவும் கிடைக்கவில்லை. எனினும் கடந்த தேர்தலில் இரு ஆசனங்களைக் கைப்பற்றினீர்கள். இம்முறை உங்கள் கட்சிக்கான ஆதரவு இன்னும் அதிகரித்துள்ளதாக நினைக்கிறீர்களா?**

ப: தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வெறுமனே தேர்தல் ஆசனத்துக்கான கட்சியல்ல. அது தமிழ்த் தேசிய இனத்தின் இருப்புக்கான மக்கள் பேரியக்கமாகும். வடக்கு-கிழக்கு தமிழர் தாயகத்தில் தமிழ் மக்கள் தமது இருப்பைத் தக்க வைப்பதற்காக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை ஆதரிக்க வேண்டிய ஒரு கட்டாய சூழல் இன்று ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கான ஆதரவுத் தளம் தற்போது பலம் பெற்று வருகிறது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எத்தனை ஆசனங்களைப் பெறும் எனும் கேள்விக்கு அப்பால் தமிழர் தாயகத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பெரும்பான்மை தரப்பாக இருக்க வேண்டும் என்பதை கணிசமான தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளதால் முன்னணி வடக்கு- கிழக்கு தமிழர் தாயகத்தில் நிச்சயமாக அறுதிப் பெரும்பான்மையைப் பெறும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

**கே: எனினும் கடந்த தேர்தலில் உங்கள் கட்சியின் வெற்றிக்கு முக்கியமான பங்காற்றிய சிலர் இப்போது முன்னணியில் இல்லை. அவர்கள் வேறு கட்சிகளில் தேர்தலில் நிற்கின்றார்கள். இதனால் அவர்களின் வாக்குவங்கியை இழப்பதால், முன்னணிக்கு அது பின்னடைவாக அமையாதா?**

ப: தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு கொள்கைசார் அரசியலை கடந்த 14 வருடங்களாக முன்னெடுத்து வருவதனால் முன்னணிக்கு கிடைத்த வாக்குகள் தனி ஒருவருக்கானது அல்ல. அது கட்சியின் கொள்கைக்காக கிடைத்த வாக்குகளாகவே நான் கருதுகிறேன். தனி ஒருவரின் வாக்கு வங்கியில் தங்கி நிற்கும் அரசியலை முன்னணி என்றைக்குமே செய்ததில்லை. தனி ஒருவரின் வாக்கு வங்கியை முன்னணி தகுதியீனமாகவே பார்க்கிறது. முன்னணியின் கொள்கையில் உறுதியாக நிற்கும் ஒருவனையே முன்னணி தகுதியுள்ளவனாக கருதுகிறது. கொள்கையை கைவிட்டு பிரிந்து சென்றவர்களால் அல்லது விலக்கப்பட்டவர்களால் முன்னணிக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. இவ்வாறு கொள்கைப் பிறழ்வுடையர்கள் வெளியேற்றப்பட்டதனாலேயே முன்னணி தூய்மைப்படுத்தப்பட்டுள்ளதுடன் பலம் பெற்றுமுள்ளது. சில்லறைகளின் வெளியேற்றத்தினால் முன்னணிக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. வெவ்வேறு கட்சிகளில் தேர்தலைச் சந்திப்பவர்கள் என்றைக்குமே முன்னணிக்காரர்களாக இருக்கவும் முடியாது.

**கே: தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்று உங்கள் கட்சி அறியப்பட்டாலும், தேர்தல் என்று வரும்போது சைக்கிள் சின்னத்தையும், அந்தச் சின்னத்துக்கு உரித்தான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பெயரிலும் தானே போட்டியிடுகின்றீர்கள். இது எதனால்? உங்கள் கட்சி ஒரு குடும்பத்தின் கட்சியாக இருப்பதாலா?**

ப: தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பது கட்சி என்பதற்கும் அப்பால் அது பொது அமைப்புகளையும் உள்ளடக்கிய ஒரு மக்கள் பேரியக்கமாகும். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை ஒரு அரசியல் கட்சியாக பதிவு செய்யாது அதனை மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வையும் கோட்பாட்டு அரசியல் அறிவூட்டலையும் ஏற்படுத்தும் ஒரு மக்கள் பேரியக்கமாக கட்டியெழுப்ப வேண்டும் என்பதே அதன் மத்திய குழுவின் தீர்மானம் ஆகும். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸுக்கும் இடையில் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் தேர்தல்களில் போட்டியிடுவதற்காக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியையும் அதன் சின்னத்தையும் பயன்படுத்த முடியும். அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஒரு குடும்ப கட்சி என்று சேறு பூசு முனைபவர்கள் இன்று அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் சைக்கிள் சின்னமுமே தமிழ் இனத்தை காத்து நிற்கிறது என்பதை மறந்து விடுகிறார்கள். அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தைத் தவிர அவரது குடும்பத்தில் வேறு எவரும் இக்கட்சியில் இல்லை. தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி அன்று தமிழீழக் கோரிக்கை முன்வைத்தபோது அதன் அங்கத்துவக் கட்சியாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் இருந்து வந்ததையும் பின்னர் அதன் பொதுச் செயலாளர் மாமனிதர் குமார் பொன்னம்பலம் தமிழருடைய ஆயுதப் போராட்டத்தை முழுமையாக ஆதரித்து வந்ததையும் யாரும் இலகுவில் மறந்து விட முடியாது. மேலும் விடுதலைப் போராட்டக் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பிரதான பங்கெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இப்போது பொன்னம்பலம் எங்கள் இனத்தின் பலமாக உயர்ந்து தெரிகிறார். குடும்பக் கட்சி, குடும்ப ஆட்சி எனும் போலி கருத்துருவாக்கத்திற்கு அப்பால் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தமிழ் இனத்திற்கான கட்சி என்பதை இன்று உறுதிப்படுத்தி இருக்கிறது.

**கே: தென்னிலங்கையில் மட்டும் தான் மாற்றம் என்ற அலை அடிக்கிறதா? அல்லது தமிழர் தாயகத்திலும் அது எதிரொலிக்குமா?**

ப: நாடெங்கிலும் வீசுகின்ற அலை என்பது வெறுமனே தெற்கிலே ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தையே குறித்து நிற்கிறது. பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவித்த சிங்கள தேசம் ஊழல் ஒழிப்புக்கான மாற்றம் எனும் வெற்றுக் கோஷத்தின் ஊடாக ஏற்படுத்தி இருக்கும் ஆட்சி மாற்றம் போலியானதும் நிலையற்றதுமாகும். தென் இலங்கையில் ஆட்சியாளர்கள் மீது இருந்த வெறுப்புக் காரணமாக ஏற்பட்ட ஆட்சி மாற்றமானது வடக்கு- கிழக்கு தமிழர் தாயகத்தில் போலித் தமிழ்த் தேசியம் பேசி இதுவரை காலமும் தமிழ்த் தேசியப் பரப்பில் அரசியல் செய்து வந்த போலித் தமிழ்த் தேசியக் கட்சிகளை நிராகரிக்கும் வகையிலான அரசியல் மாற்றமாக இப்போது உணரப்பட்டு வருகிறது. வடக்கு- கிழக்கு தமிழர் தாயகத்தில் கடந்த 14 வருடங்களாக தமிழர் தேசக் கோட்பாட்டு அரசியலை செயற்பாட்டு அரசியலாக முன்வைத்து போராடிவரும் ஒரே அமைப்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியே இருந்து வருகிறது. ஆகவே வடக்கு- கிழக்குக்கான மாற்றம் என்பது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கான மாற்றமாகவே இருக்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

**கே: இலங்கையின் ஜனாதிபதியாக இடதுசாரிக் கொள்கையில் வந்த அநுரகுமார தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில், நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் புதிய அரசாங்கமும் அவர் தலைமையிலேயே அமையவுள்ளதாகக் கணிப்புகள் கூறுகின்றன. தேசிய மக்கள் சக்தி ஆட்சியைப் பிடிப்பதால் தமிழ் மக்கள் எவ்வகையான விளைவுகளை எதிர்பார்க்கலாம்?**

ப: தமிழர்களுடைய அரசியல் அபிலாசைகளை முற்றாக மறுத்து நிராகரித்து வரும் தேசிய மக்கள் சக்தியின் வரவானது நிச்சயம் மாறிவரும் பூகோள அரசியல் சூழலுக்கு ஏற்ப தமிழர்களுக்கு சாதகமாகவே பார்க்கப்பட வேண்டும். குறிப்பாக தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாடான இந்திய - இலங்கை ஒப்பந்த நிராகரிப்பும் அதனூடான 13ஆம் திருத்தச் சட்ட அதிகாரப் பகிர்வு நிராகரிப்பும் நிச்சயமாக இந்திய - மேற்கின் தலையீட்டுக்கு வழிவகுக்கும். இவ்வாறானதொரு சூழலில் தமிழ் மக்கள் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு உறுதியான தலைமையைச் தெரிவு செய்வதன் மூலமாக இராஜதந்திர நகர்வு ஒன்றினை மேற்கொள்ள முடியும். குறித்த பூகோள அரசியல் சூழலை கையாள்வதற்கு உரிய தரப்பாக இன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மாத்திரமே இருந்து வருகிறது.

**கே: அநுரகுமார அரசாங்கத்தில் தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த சிலருக்கும் அமைச்சுப்பதவிகள் கிடைக்கவுள்ளதாகச் சொல்லப்படுகின்றதே. அதைப் பற்றி...?**


ப: 2015 க்கு பின்னராக ரணில் - மைத்திரி அரசினால் கொண்டுவரப்பட்டிருந்த 'ஏக்கிய ராஜ்ய' அரசியலமைப்பு தீர்வு திட்ட வரைவு தற்போது நடைமுறையில் உள்ள 1978 ஆம் ஆண்டு ஒற்றையாட்சி அரசியலமைப்பினை விடவும் மிகவும் இறுக்கமான ஒற்றையாட்சிக் கட்டமைப்பை கொண்ட ஒன்றாகும். இந்தத் தீர்வுத் திட்ட வரைவு முயற்சியில் ஈடுபட்டிருந்த சுமந்திரன், ஜயம்பதி விக்ரமரத்ன போன்றோர் மிகவும் [illegible] இருக்கின்ற ஒற்றையாட்சிக் கட்டமைப்பை மேலும் பலப்படுத்தும் முகமாக இதனை வரைந்திருந்தனர்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
10 நவம்பர் 2024

# தமிழ்த்தேசிய அரசியல் நீக்கம் செய்ய முனைவோரை இந்தத்தேர்தலில் மக்கள் புறக்கணிப்பர்!



## கஜேந்திரகுமார் கணிப்பு

O நேர்கண்டவர்: ஜெ.சுலக்சன்

தமிழ்த் தேசியமக்கள் முன்னணியின் தலைவரும், யாழ். தேர்தல் மாவட்டத்திற்கான அந்தக் கட்சியின் முதன்மை வேட்பாளரும், சட்டவாளருமான கஜேந்திரகுமார் உதயன் – சஞ்சீவிக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணல் இங்கு பிரசுரமாகின்றது.

**கே: மக்களிடம் கடந்தகால அரசியல் நிலைப்பாடுகள் சலிப்பையும், அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளன. இதனால் அவர்கள் தங்களுக்கு புதிய மாற்றத்துக்கான களமாக இந்தத் தேர்தலை பயன்படுத்த எண்ணுகின்றனர். இந்த நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்த மாற்றத்துக்கான அலையை எதிர்கொண்டு வெற்றியீட்ட முடியுமா?**

ப: நிச்சயமாக. இவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரேயொரு தரப்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியே காணப்படுகின்றது. மாற்றத்துக்கு அப்பால் எங்கள் கட்சிக்கு என்று ஒரு இலக்கு உள்ளது. சிங்களதேசம் ஒருதலைப்பட்சமாக இந்த ஒற்றை ஆட்சி அரசியலமைப்பை தமிழ் மக்களின் ஆதரவோடு நிறைவேற்ற முயற்சிப்பதை நாம் தடுக்க வேண்டும். இதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு வடக்கு - கிழக்கில் குறைந்தது 10ஆசனங்களாவது கிடைப்பது அவசியம். இதனால் மாற்றம் என்பதைத் தாண்டி இந்தத் தேவையை நிறைவேற்றுவதற்கே எங்கள் கட்சி பயணிக்கின்றது.

**கே: தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்று மக்கள் மனதில் பதிவான உங்கள் தலைமையிலான கட்சியை ஏன் பதிவு செய்யாமல் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் உங்கள் பாட்டனாரின் கட்சி என்ற பெயரில் போட்டியிடுகின்றீர்கள். ஏன் இப்படி ஒரே சின்னம், இரு கட்சி என்ற நிலை.?**

ப: தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை ஒரு கட்சியாக நாங்கள் வளர்ப்பதை விரும்பவில்லை மாறாக அது ஒரு அரசியல் இயக்கமாக தொடர்ந்து வைத்திருப்பதை நாம் விரும்பு கின்றோம். நாங்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை ஸ்தாபித்த நாளிலிருந்து அனைத்து உறுப்பினர்களும் விரும்பி எடுத்த முடிவை நடைமுறைப்படுத்தும் வகையில் கடந்த 15 வருடங்களாக இயங்கி வருகின்றோம். மற்றைய அமைப்புகள் போல் அல்லாமல் உதாரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்த பிரச்சினை என்னவென்றால் அங்கம் வகிக்கும் பல கட்சிகள் இருக்கும் இடத்தில் தமிழரசுக் கட்சி ஒரு தலைப்பட்சமாக முடிவுகள் எடுத்து ஆதிக்கம் செலுத்தும் நிலை காணப்பட்டது. அதனாலேயே அங்கு கூட்டமைப்பை பதிவுசெய்ய வேண்டும் என்ற கோரிக்கை மேலோங்குவதற்கான பிரதான காரணமாக இருந்தது. ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பதிவுசெய்யப்பட்ட கட்சியாக இருந்தாலும் கூட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸினை வைத்து நாங்கள் இயங்குவதாக இல்லை. தேர்தலில் போட்டியிடுவதற்குத்தான் நாங்கள் சைக்கிள் சின்னத்தை பயன்படுத்துவோமே தவிர எங்களுடைய அமைப்பின் ஆள்சேர்ப்பு நடவடிக்கை போன்ற அனைத்தையும் செய்வது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தான். முன்னணியைப் பதிவு செய்வது தொடர்பாக கட்சிக்குள் இருந்து எந்த ஒரு கோரிக்கையும் முன்வைக்கப்படவில்லை. இது வெளியிலிருந்து பரப்பப்படும் ஒரு செய்தியே. கட்சிக்குள்ளே இருப்பவர்களுக்கு இது தொடர்பான சிறந்த புரிந்துணர்வு காணப்படுகின்றது.

**கே: தேசிய மக்கள் சக்தி அநுர குமார தலைமையில் நாடாளுமன்றில் பெரும்பான்மையைப் பெற்று அரசமைத்தால் அது தெற்கைப் போல தமிழர்களுக்கும் மாற்றத்தைக் கொண்டுவருமா? இதுவரை காலமும் சிங்கள அதிகாரத்தரப்பிடம் இருந்த இனவாதக் கண்ணோட்டத்தில் மாற்றம் உண்டாகுமா?**

ப: இது வடக்கு - கிழக்கில் எந்த ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதல்ல. இதுவரை ஜே.வி.பி.யும் அநுரகுமார திஸாநாயக்காவும் நடந்துகொண்ட விதத்தின் அடிப்படையில், தமிழர்களின் விடயங்களில் தெற்கிலிருந்த ஆட்சியாளர்களின் நிலைப்பாட்டில் இருந்து அநுர அரசாங்கமும் வித்தியாசமாக இருப்பதாக தெரியவில்லை. மாறாக ஜே.வி.பி. இன் கடந்தகாலச் செயற்பாடுகளை எடுத்துப் பார்க்கும் போது இனவாதக் கோணத்தில் ஏனைய தரப்புகளோடு போட்டியிட்டு ஒரு சில இடங்களில் முன்னுக்கு நிற்கின்ற நிலை காணப்படுகின்றது. 2001 தமிழீழ விடுதலைப்புலிகளோடு இடம்பெற்ற பேச்சுவார்த்தையை நிறுத்தி ஒரு யுத்தத் தீர்வுதான் அவசியம் எனும் கோணத்தில் தீவிரமாக சிங்கள மக்கள் மத்தியில் ஜே.வி.பி. கருத்துருவாக்கம் செய்தது அனைவரும் அறிந்த விடயம்.

சுனாமி ஏற்பட்ட போது சுனாமி கட்டமைப்பை சர்வதேசம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை அனுப்ப இருந்த போது அந்தக் கட்டமைப்பை நிராகரித்ததே ஜே.வி.பி. கட்சிதான். தமிழ் மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் கூட போய்ச் சேரக்கூடாது என்ற அளவுக்கு அவர்களின்செயற்பாடுகள் காணப்பட்டன. தமிழ்மக்களின் அடிப்படைக் கோரிக்கையாக இருக்கக் கூடிய தமிழ்த் தேச அங்கீகாரம், தமிழ்த் தாயகக் கோட்பாடுகள் மற்றும் இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணம் என்ற விடயங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கிலேயே உச்ச நீதிமன்றம் சென்று வடக்கு - கிழக்கு இணைப்பைத் துண்டித்தனர். இவ்வாறு செயற்பட்ட ஜே.வி.பி. கட்சி இனிவரும் காலங்களில் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றி, கடந்த கசப்புகளை தலைகீழாக மாற்றும் என்பதற்கு எந்த ஒரு ஆதாரமும் கிடையாது. மாறாக போருக்குப் பிற்பட்ட காலத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளான காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, அரசியல்கைதிகளின் பிரச்சினை, காணி அபகரிப்புப் பிரச்சினை, கலாசாரம் அழிவுறும் பிரச்சினை போன்றவற்றில் எவற்றிலுமே ஜே.வி.பி. கட்சி கலந்து கொண்டதே கிடையாது. ஆகவே இவர்களின் ஆட்சி தெற்கிலே மாற்றத்தை ஏற்படுத்தினாலும் கூட வடக்கு, கிழக்கில் நன்மையையோ அல்லது மாற்றத்தையோ கொடுக்கும் என்பதற்கு எந்த ஒரு ஆதாரமும் இல்லை.

**கே: அண்மைக்காலமாக உடல்நலக் குறைவால் செயற்பாட்டு அரசியலில் இருந்து ஒதுங்கி இருந்தீர்கள் இந்தத் தேர்தலில் உங்கள் உடல் நலக் குறைவு பிரசார நடவடிக்கையை பாதிக்காதா?**

ப: இல்லை. தேர்தலில் வழமையாக நான் செய்கின்ற பங்களிப்பை இந்தத் தேர்தலிலும் செய்வேன்.

**கே: சில தமிழ்க்கட்சிகளின் வேட்பாளர்கள் தேர்தலில் தோற்றலும், தேசிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராகி, பின்னர் அமைச்சுப் பொறுப்புகளையும் கையில் எடுக்கவுள்ளதாக கூறுகிறார்கள்,. இது குறித்து..?**

ப: அமைச்சுப் பதவிகளை குறிவைத்து சிலர் அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்துவதாக சொல்லப்படுவது ஆச்சரியப்படுவதற்கு இல்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த அனைத்துத் தரப்புகளும் தமிழ்த் தேசியம் என்று சொல்லி வாக்குகளை எடுத்தாலும் கூட அவர்களின் செயற்பாடுகள் அனைத்துமே தமிழ் அரசியலில் இருந்து தமிழ்த் தேசியத்தை நீக்கம் செய்வதாகத் தான் கடந்த 15 வருடங்களாகக் காணப்படுகின்றன. இது இயற்கையாக வரக்கூடிய பரிணாமம். தமிழ்த் தேசிய நீக்கத்தைச் செய்து, இணக்க அரசியல் கோணத்தில் செயற்படத் தொடங்கி அடுத்தகட்டமாக அரசாங்கத்துடன் இணைந்து பதவிகளை எடுத்து மக்களை முழுமையாக ஒரு சிங்கள மயப்படுத்தும் வேலைத்திட்டத்தில் விரும்பிக் கொண்டு செல்லும் நோக்கம் தான் தமிழ்த் தேசிய நீக்க அரசியலின் அடிப்படையே. இதன் அடுத்தபடியாகத் தான் அமைச்சுப் பதவிகளைப் பெறும் செயற்பாடுகள். இணக்க அரசியலையும், தமிழ்த் தேசிய நீக்க அரசியலையும் செய்ய விரும்புகின்ற தரப்புகளுக்கு இந்தத் தேர்தல் தான் இறுதிச் சந்தர்ப்பம். இந்தத் தேர்தலில் அனேகமாக அவர்கள் அனைவரும் முழுமையாக நிராகரிக்கப்படுவார்கள். அவ்வாறு நிராகரிக்கப்பட்டாலும் வேறுவகைகளிலேனும் பதவிகளை எடுப்பதே அவர்களின் முக்கியமான நோக்கமாகக் காணப்படும்.

**கே: இந்தத் தேர்தலிலே உங்கள் கட்சி எத்தனை ஆசனங்களை அடையவேண்டுமென்ற இலக்கு ஏதும் உண்டா?**

ப: எங்களுடைய இலக்கு அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவதுதான். 18 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே தெரிவுசெய்யக் கூடிய இடத்திலே 10 ஆசனங்களையாவது பெறவேண்டும் என்பது தான் எமது இலக்கு. அதை நோக்கி வேலை செய்கிறோம். தனிப்பெரும் கட்சியாக வடக்கு-கிழக்கில் விளங்குவோம் என்ற நம்பிக்கை நமக்குண்டு. தற்போது ஜே.வி.பி. அரசாங்கம் கொண்டுவர இருக்கும் ஒற்றையாட்சி அரசியலமைப்பை தமிழ் மக்கள் நிராகரிப்பதை காட்டுவதாக இருந்தால் எமது கட்சி அறுதிப் பெரும்பான்மையாக 10ஆசனங்களை பெற்றேயாகவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழ்ப்பாணத்தில் ஏழு நாட்கள்.... 2

பேராசிரியர் க.பஞ்சாங்கம்
புதுச்சேரி

இனி, "ஈழத்துத் தமிழ்த் திறனாய்வு ஊடான மானுட விடுதலை" என்ற என் திறப்புரையை இங்கே விவரிப்பதற்கு முன்பு முதலில் இந்தப் பொன் விழா நிகழ்ச்சிகளில் என்னை பெரிதும் கவர்ந்த உள்ளத்தை உலுக்கிய ஒரு நிகழ்வை முதலில் முடிந்த அளவிற்குச் சொல்லிவிட முயலுகிறேன்.

அந்த நிகழ்வு இரண்டாம் நாள் நடந்த முப்பெரும் விழாவில் ஒரு பகுதியாக சுமார் 10 மணி முதல் 11 மணி வரை ஒரு மணி நேரம் நடந்தது. அந்த ஒரு மணி நேரமும் அரங்கம் கவிதை மழையில் நனைந்து தோய்ந்தது. மனிதமொழி நிகழ்த்தும் வாழ்வின் மாயத் தோற்றங்களை மிகவும் அடர்த்தியாக நாம் காணக்கூடியது கவிதை வடிவில்தான் என்பதால் நான் அடிப்படையில் ஒரு கவிதை இரசிகன். எனவே அந்த ஒரு மணி நேரமும் நான் தரையில் இல்லை என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

நிகழ்வின் பெயர் 'கவிதா நிகழ்வு' கட்டமைத்து நெறிப்படுத்தியவர்கள் சமூகவியல் துறை சார்ந்த முதுநிலை விரிவுரையாளர், எழுத்தாளர், இராஜேஸ்கண்ணன், தமிழ்த் துறை சார்ந்த விரிவுரையாளர், கவிஞர் த. அஜந்தகுமார் ஆவார். அந்த நிகழ்வு நாடகப் பாணியோடு கூடிய கவிதை சொல்லல் அரங்காகும்.

'இருபதாம் நூற்றாண்டின் கவிதைகளின் வழி மானிட விடுதலைக்கான தேடல்' என்ற தலைப்பின் கீழ்ப் பத்துக் காட்சிகளை அமைத்துக் கொண்டனர்.

ஒவ்வொரு காட்சிக்கும் முன்னுரையாக கவித்துவம் சிறந்த ஒரு பின்னணி உரையும், தொடர்ந்து அதற்கேற்ற கவிதைகளுமாக நிகழ்ச்சி வடிவமைக்கப்பட்டிருந்தது. முதல் உரையே (இங்கே சுருக்கமாக) 'விடுதலை! இதுவே மனிதன் அவாவி நிற்கும் உன்னதம்! தளை அறுத்தல், விலங்கொடித்தல், சிறகு விரித்தல் இவற்றுக்கான எத்தனங்களே வாழ்வின் நகர்ச்சி. இதுவே வாழ்வின் வெற்றியும் கூட.... தனிமனித விடுதலை, சமூக விடுதலை, தேசத்தின் விடுதலை, மனித குல முழுமைக்குமான மானிட விடுதலை... விடுதலைக்காய் மனித குலம் கொடுத்த விலைச்சுமை அதிகம்... மிக அதிகம். இங்கே இந்த மேடையில் கேட்க இருப்பவை கவிதையில் பதிந்து காலங்களாய் விரிய இருப்பவை.... கழிந்து போன ஒரு நூற்றாண்டின் துயரம். விடுதலை நோக்கி அந்த நூற்றாண்டின் மனிதர்களிடம் விதைத்து விட்ட உத்வேகத்தின், வரலாற்றின் ஒரு வெட்டு முகம் இது..... இதில் இந்தக் கவிஞர்கள் அவாவிய மானிட விடுதலையின் பரிமாணங்கள் தெரியும். பதப்பருக்கைகளாய் அவை உங்கள் காதுகளைச் சங்கமிக்கும்;. உணர்வு ஊட்டும்' இவ்வாறு அறிமுகம் முடிந்தவுடன் 'இரண்டாயிரமாண்டுச் சுமை எமக்கு' என்று வரும் ஈழத்துக் கவிஞர் முருகையனின் நீண்ட கவிதை ஒன்றை உரைஞராகத் தோன்றிய அஜந்தகுமார் உரையாகச் சமர்ப்பித்தார்.

தொடர்ந்து விரிந்த இரண்டாவது காட்சி 'இலங்கை நாடு எம் நாடு' எனும் முழுமையான தேசம் குறித்த உணர்வை வெளிப்படுத்தும் வகையில் அமைந்தது. நாட்டில் வாழ்ந்த மாந்தர்கள் எவ்வாறான வேறுபாடுகள் கொண்டிருந்த போதும், அந்த வேறுபாடுகளைக் கடந்து தேசத் தாயை நேசித்த காலம் ஒன்றைக் கண் முன்னே நிறுத்தும் வகையில் கவிதை ஒன்றை பாடலாக அரங்கு நிறைத்திருந்தது. 'இலங்கை மணித்திரு நாடெங்கள் நாடே இந்த இனிய உணர்ச்சி பெற்றால் இன்ப வீடே' என்ற சோமசுந்தரப் புலவரின் பாடல் பாடப்பட்டு தொடங்கப்பட்டது. தொடர்ந்து 'சிங்களவர் செந்தமிழர் முகமதியர் செல்வப்புதல்வர்க்கொரு தாய் நாடு' என்று பாடிய கவிஞனின் காலம் ஒன்றில் இலங்கை மணித்திரு நாடென்றோம்! இலங்கும் நித்திலத்தின் பெருமை சொன்னோம்! வளங்கள் விஞ்சும் தாய் பெருமை வாய்நிறைந்து பாடி புகழ்ந்துரைத்தோம்! 'இலங்கை வளம் கேளாத செவியென்ன செவியோ இரும்பாலே செம்பாலே செய்திட்ட செவியோ?' என்றுரைத்துக் களிப்புற்றோம்! என்று முடியும் நிலையில் காலனிய காலச் சமூகமும் காலனியத்திலிருந்து விடுதலையாகும் வேணவாவும் சொல்லப்படுகின்றது. என்று மூன்றாவது காட்சி தொடங்கியது. நான்கு மாணவிகள் மேடையில் தோன்றினார்கள். உரைஞர் உரை தொடங்கியது இவ்வாறு:

'பெருநிலங்களைக் காவுகொள்ளும் வல்லமை சிறு நிலங்களுக்கு வாய்த்திருந்தது! பேரரசுகளின் பாதங்களுக்குப் பாதணிகளோடு பாதபூசை செய்தோம். நசிந்துகிடக்கும் நிலை வந்தது. கழையிழந்தோம். கடல்கள் கடந்துவந்த கனத்தஇருள் சூழ்ந்த காலம் ஒன்றில் நாமிருந்தோம்.

அந்நியம் என்று ஒதுக்கிவிடும் அளவுக்கு அதுவொன்றும் தந்துவிட மறுக்கவில்லை எம்மவர்க்கு. தந்துவிட்டுப் போனவை தாராளம்தான்! தாராளம்... மிகத்தாராளம்... கல்வி செழித்தது கருந்தனமாக... கண்டம் கடந்தது கீர்த்தி மிகச்சிறந்து. பெண்கள் கற்றுயர்ந்து பெருமை பெற்றார். பெரும் பண்பாடு கண்டுயர்ந்தார்."

இவ்வாறு அவர் பேசி முடித்தவுடன் மேடையில் நிற்கும் நான்கு மாணவிகளும் ஒருவர் பின் ஒருவராக நான்கு கவிதைகளை முழங்கினார்கள். அந்த முழக்கம் காலனிய காலத்தின் அடிமை நிலையையும் அது தந்துவிட்டுப்போன முன்னேற்றமான மாற்றங்களையும் மாறி மாறிப் பேசின. அந்தக் கவிதைகள் பாவலர் தெல்லிப் பழை துரையப்பா பிள்ளையின் "சிந்தனைச் சோலை" எனும் தொகுப்பில் வந்த கவிதைகள் ஆகும். அதில் ஒரு கவிதை இவ்வாறு சொல்லிற்று:

**"இங்கிலீ சாருடையிங்கிலீசர்க்கே யெழி**
**லொங்கட் கோவஃ தவலட்சணம்**
**தங்கு சுதேசிக ளுக்குச் சுயவுடை**
**தான்வடி வாமடி சங்கமின்னே"**




மொத்தம் 17 மாணவிகளும் ஒரே ஒரு மாணவனும் நிகழ்ச்சி முழுவதுமே கறுப்பு உடையுடனும் இடுப்பில் சிவப்புத் துணியுடனும் முறையாக வந்து நின்று மனப்பாடமாக ஏற்ற இறக்கத்தோடும் கோபம், அழுகை, இரக்கம், வியப்பு, பெருமிதம் முதலிய நவரசங்களோடும் கவிதை வரிகளைக்கொட்டிய பாங்கு அவையினரைப் பல மடங்கு உணர்ச்சி பட வைத்தது என்பது சிறப்பாகச் சொல்ல வேண்டிய விடயமாகும். காலனிய காலத்தின் விடுதலை உணர்வுகளைப் பேசிய கையோடு அடுத்த காட்சியில் 'மொழி உணர்வும் தேசியவாதமும்' குறித்த கவிதைகள் நிகழ்த்தப்பட்டன. காலனியம் விதைத்துவிட்டுப் போன தேசிய இனங்களுக்கிடையிலான பிரிவினைகள் தமிழ்த் தேசியம், சிங்களத் தேசியம், முஸ்லிம் தேசியம் என்றெல்லாம் முகிழ்விடத் தொடங்கிய பாங்கை கவிஞர்கள் தங்கள் கவிதைகளில் வெளிப்படுத்தியிருந்தனர், அந்தக் கவிதைகளை மாணவர்கள் உணர்ச்சிப் பெருக்கோடு அரங்குக்கு கொண்டு வந்தனர்.

'காலனியக் காலணியில் மிதிபட்டுச் சிதையும் வாழ்வு கசந்துபோயிற்று. காலனியம் தகர்க்க, காலனியம் நீக்க கடும் பிரயத்தனம் செய்தோம். நம் பண்பாடு எது?... பிறனின் பண்பாடு எது?... சரியான சிரத்தை கொண்டோம். அந்தச் சிரத்தை இது' என்று பின்னணியில் உரைஞர் சொல்லவும், அந்தச் சூழலை கவிதைகளால் நிறைத்தனர் அரங்கில் ஆற்றுகை செய்த மாணவர்கள். அந்தக் காட்சியில் வந்த கவிதைகளில்,

**ஆண்ட வெள்ளையர்கள் நேர் அறவழி தவறினார்**
**அசடருக் கழகியை அடகு வைத்தனர்; இப்**
**பூண்டுகள் தமிழை யோர் புறமொதுக்கிடுகிறார்**
**பொலிவழிந் தவள்தரைப் புழுதியிற் புரள்கிறாள்**
**மூண்டெழுந்திடுக போர் முதுமொழிக் குரிமைகள்**
**முழுமையும் பெறுக, இன்றேல் முடிந்தொழிக! இந்**
**நீண்ட நெல் வயல் நிலம் நினது காண் தமிழனே**
**நிசமடா நினது தோள் வலியும் நின் புகழுமே!**

என்ற உருத்திரமூர்த்தியின் கவிதை உணர்ச்சிமிக்கதாக வெளிப்படுத்தப்பட்டது. காலனியத் தகர்ப்பு, காலனிய நீக்கம் என்பவை பற்றிப் பேசிய கவிஞர்களின் முழக்கங்கள் மானிட விடுதலையின் முதன்மையான காலத்தைப் பேசி முடிக்கும்போது, 'தேசத்தின் செழிப்பை வியந்தோம். தேசத்தில் கவிந்த இருள் மேகத்தின் மழையெடுத்து மேலும் வளம் சேர்த்தோம். பெய்த மழை ஏனோ பொதுவாய் பெய்யவில்லை? எல்லா நிலத்துக்கும் ஏன் செழித்துப் பெய்யவில்லை?... இனமென்றோம்... மொழியென்றோம்... எங்கள் வாழ்விடமென்றோம்... என்னினமே... என்சனமே... ஏற்றம் என்றுரைத்தோம்... ஒரு மொழிக்கான தனிப்பெருமை சட்டத்தால் நிலைநாட்டப்பட்ட போது 'தமிழ் எங்கள் ஆயுதம்' என்று குரல் உயர்த்திப் பாடினோம்என்று வரும் உரைஞரின் வரிகள் படிப்படியாக இனவிடுதலை நோக்கி இழுத்துச் செல்லும் பாங்கில் அமைந்தமை நுணுக நோக்குபவர்களுக்கு புரியம்படியாக அமைந்துள்ளது. இந்த உரையை ஒட்டி வந்த மூன்று கவிதை முழக்கம் அவையினரை உறைய வைத்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் இலக்கு...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அநுர குமார திஸாநாயக்க முழுமையான ஒத்துழைப்பையும் வழங்கி இருந்தார். இதனால்தான் அநுரகுமார திஸாநாயக்கா தனது ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 2016 ஆண்டளவில் நல்லிணக்க அரசு அதிகாரத்தில் இருந்த காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட குறித்த 'ஏக்கீய ராஜ்ய' அரசியல் தீர்வு திட்ட வரைபை முற்றாக அமுல்படுத்துவதாக மக்கள் ஆணையைப் பெற்றிருந்தார். இதனையே கடந்த ஜனாதிபதித் தேர்தல் பரப்புரையின் போது அநுரகுமார திஸாநாயக்க 'ஸ்ரீலங்கா ஒற்றையாட்சி அரசியலமைப்பை யும் அதன் உறுப்புரை 9 இன் கீழ் பௌத்தத்துக்கான முதலிடத்தையும்' சுமந்திரன் ஏற்றுவிட்டதாக குறிப்பிட்டிருந்தார்.

தற்போது அநுரவும் சுமந்திரனும் குறித்த 'ஏக்கீய ராஜ்ய' தீர்வுத் திட்டத்தை அமுல்படுத்த தயாராகி வருவதாக செய்திகள் வெளிவந்துள்ள நிலையில் இனத்தைக் காட்டிக் கொடுக்கும் சுமந்திரனின் நிலைப்பாட்டுக்கு பிரதி உபகாரமாக அமைச்சுப் பதவி ஒன்றை சுமந்திரனுக்கு கொடுப்பதற்கு அநுர தயாராகி வருவதாக செய்திகள் வெளிவந்துள்ளன. இதனை சுமந்திரன் தான் கலந்து கொண்ட ஊடகச் சந்திப்பின் மூலமாக ஏற்றுக் கொண்டும் உள்ளார்.

சுமந்திரனின் இந்தக் காட்டிக்கொடுப்புக்கான பதிலை இம்முறை தேர்தல் மூலமாக தமிழ் மக்கள் சுமந்திரனுக்கு கொடுப்பார்கள் என்று நம்புகிறோம்.

**கே: இம்முறை வடக்கு, கிழக்குத் தேர்தல் களத்தில் குதித்துள்ள பெரும்பாலான கட்சிகளும், சுயேச்சைகளும் தாமே தமிழ்த் தேசியத்தைக் காப்பதாக மக்களிடம் சொல்கின்றன. அந்தளவுக்கு தமிழ்த் தேசியம் மலிவான தேர்தல் பொருளாக மாறிவிட்டதா? அல்லது தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தியே முன்னணி கடந்த தேர்தலில் 2 ஆசனங்களை வென்றதால், தாமும் வெற்றிபெற ஏனைய கட்சிகள் தமிழ்த்தேசியத்தை தேர்தல் காலத்தில் கையில் எடுக்கின்றனவா?**

**ப:** கடந்த 14 வருடங்களாக 'ஒற்றுமை' என்னும் போலியான வெற்றுக் கோஷத்துக்குள்ளே தமிழ் தேசிய அரசியலை முடக்கி வைத்த இந்த தமிழ்த் தேசியக் கட்சிகள் இன்று மக்கள் முன் அம்பலப்பட்டு நிற்கின்றன. தமிழ்த் தேசியக் கோட்பாட்டில் ஒன்றுபடாது வெறுமனே தேர்தல் ஆசனங்களுக்காக ஒன்றுபட்டு போலி தமிழ்த் தேசியவாதம் பேசி வந்த போலி தமிழ்த் தேசியக் கட்சிகளை மக்கள் அடையாளம் கண்டுள்ளனர். மக்களுக்கு உண்மையானதும் நேர்மையானதுமான கொள்கை வழி நின்ற அரசியலை எடுத்துக் கூறிவந்த முன்னணி அதற்கு சமாந்தரமாக தமிழ்த் தேசிய நிலைநின்று அதன் செயற்பாட்டு அரசியலையும் முன்னெடுத்தவாறு வடகிழக்கு தமிழர் தாயக பரப்பில் ஸ்ரீலங்கா பௌத்த பேரினவாத அரசின் கட்டமைப்பு சார் இனப்படுகொலைக்கு நீதி கோரியும் ஸ்ரீலங்கா அரசின் நிறுவனமயப்படுத்தப்பட்ட ஒடுக்குமுறைகளுக்கும் எதிராகவும் தொடர்ந்து போராடி வருவதுடன் தமிழ் மக்களுக்காக குரல் எழுப்பியும் வருகிறது. இன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மக்களோடு மக்களாக நின்று மக்கள் பிரச்சினை களுக்காகப் போராடி வருவதால் தமிழ் மக்களின் இறுதி நம்பிக்கையாகவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியே இருந்து வருகிறது. இன்று யார் கடினாட்சி தேர்தல் மாவட்டத்தில் 396 வேட்பாளர்கள் போட்டியிட்டாலும் அண்மையில் ஸ்ரீலங்கா கடற்படையின் தேவைக்காக மண்டைதீவில் சுவீகரிக்கப்பட இருந்த பொதுமக்களின் காணியை விடுவிக்கும் போராட்டத்திற்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியே தலைமை ஏற்று இருந்தது. ஏனைய எந்த ஒரு கட்சியினதோ அல்லது சுயேட்சை குழுவினதோ வேட்பாளர்கள் எவரும் இப் போராட்டத்தில் பங்கு பற்றியிருக்கவில்லை. ஆகவே தமிழ்த் தேசியக் கட்சிகளாக பல கட்சிகள் இத்தேர்தலில் போட்டியிட்டாலும் முன்னணி தனது செயற்பாட்டு அரசியல் மூலமாகவே மக்களைச் சென்று சேர்ந்திருப்பதால் போலி தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் தேர்தல் காலப் பரப்புரைகளுக்கு மக்கள் தகுந்த பதிலை வழங்குவார்கள்.

இன்று முன்னணியின் அரசியல் வடக்கு- கிழக்கு தமிழர் தாயகத்தில் தவிர்க்கப்பட முடியாத ஒன்றாக மக்களால் மக்களுக்காக மக்கள் மத்தியில் கட்டி எழுப்பப்பட்டு இருப்பதால் அதனை அவ்வளவு இலகுவில் அழித்துவிட முடியாது. தமிழினம் வென்றாக வேண்டும் என்றால் அரசியல் களத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நின்றாக வேண்டும் என்பதை மக்கள் இப்போது முழுமையாக விளங்கிக் கொண்டுள்ளார்கள்.


இனி வரும் காலங்கள் தமிழ்த் தேசிய முன்னணிக்கானதும் தமிழ்த் தேசிய இனத்துக்கானதும் ஆகும்.

## சிறுவர் கைவண்ணம்

மாணவர்களே!

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.


உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



வா.நேருயன்
தரம் 08
யா/இணுவில் மத்திய கல்லூரி



எ.ஆஹராஸ்
தரம் 9B
யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி.



சு.டிலக்சன்
தரம்- 9c
யா/கொக்குவில் இந்து கல்லூரி



ரி.டனுஸ்கா
தரம் 6B
யா/உடுவில் மகளிர் கல்லூரி.



ம.தீபிஷா,
தரம்-9A
யா/[illegible] பெண்கள் உயர்தர பாடசாலை



கி.அனுராங்கன்
தரம் 06
யா/கோண்டாவில் இராமகிருஸ்ண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org